janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 டிசம்பர் 04 - டிசம்பர் 10 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 35




அரசியல் அமைப்பு நிலை பணிகளை தொடர்வோம் – 3 ப 02



சாதியை மறுப்பவர்கள் உண்டு மறந்தவர்கள் உண்டா? ப 06



அம்பேத்கரை அபகரிக்க துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்.! ப 08



# ஐக்கிய விவசாயிகள் முன்னணி நடத்திய ஆளுநர் மாளிகை நோக்கிய பேரணி

# பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பங்கேற்பு

**25 மாநிலங்களின் 300க்கும் மேற்பட்ட மாநில தலைநகரங்களில், 3000க்கும் மேற்பட்ட மாவட்ட தலைநகரங்களில், 50 லட்சத்துக்கும் மேலான மக்கள் பங்கு கொண்ட “ராஜ் பவன் சலோ” ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.**




அரசியல் அமைப்பு சட்டம் நிறுவிய நாளும், விவசாயிகள் போராட்டம் தொடங்கிய நாளுமான நவம்பர் 26 அன்று இந்த இயக்கம் எழுச்சியுடன் நடைபெற்றது என எஸ்.கே.எம். அகில இந்திய தலைமை அறிவித்துள்ளது.

சென்னையில் 3000க்கும் மேற்பட்ட விவசாயிகள் அன்று காலை முதலே சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே குழுமி கோரிக்கை முழக்கமிட தொடங்கினர். இதில் இளைஞர்கள், மாணவர்கள், தொழிலாளர்களும் இணைந்தனர். மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமையில் குறிப்பிட்ட நேரத்தில் கோரிக்கை முழக்கத்துடன் பேரணி தொடங்கி சென்று கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மேரி லில்லி பாய் வரவேற்று பேசினார். இதைத்தொடர்ந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.குணசேகரன் முன்.எம்.எல்.ஏ., பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாநில தலைவர் பி.சண்முகம், பொதுச்செயலாளர் சாமி.நடராஜன், பி.காளியப்பன் (மக்கள் அதிகாரம்), பி. பொன்னையன், வி.அமிர்தலிங்கம் மற்றும் இதர அமைப்புகளின் நிர்வாகிகள் எழுச்சி உரையாற்றினர்.

கண்டன கூட்டம் நிறைவடைந்த பின்பு காவல்துறை முன்னணி தலைமை நிர்வாகிகள் 10 பேரை முன்னர் உத்தரவாதம் அளித்தபடி ஆளுநர் அலுவலகத்தில் மனு கொடுக்க அழைத்துச் சென்றது. ஆனால் ஆளுனர் மாளிகைக்கு அழைத்துச் செல்லாமல் கிண்டி வருவாய்த்துறை கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு போய்விட்டு, ஆர்.டி.ஓ.யிடம் மனுவை கொடுங்கள், அவர் அனுப்பி விடுவார் என்று கூறியதை ஏற்காமல் காவல்துறையின் நம்பிக்கை மோசடியை கண்டித்து, வாகனத்தில் இருந்து இறங்க முடியாது என்று மறுத்து கண்டனம் முழக்கம் செய்தனர். நேரம் செல்ல செல்ல பிரச்சினை தீவிரமானது. பேரணி, கூட்டம் முடிந்து திரும்பியவர்கள் இதை கேள்விப்பட்டு ஆங்காங்கே சாலை மறியலிலும், சிலர் கிண்டியை நோக்கியும் விரைந்து வந்தனர். அவர்களையும் காவல்துறை தடுத்து நிறுத்தியது. இந்த நிலையில் தங்கள் தவறுக்கு வருத்தம் தெரிவித்து காவல்துறையினர் சமாதானம் பேசினர்.

ஆளுநர் மாளிகை முன் நாங்கள் சென்று ஆர்ப்பாட்டம் நடத்திட போகிறோம் என நிர்வாகிகள் சாலையின் ஓரம் நடக்க தொடங்கியவர்களை காவல்துறை வலுக்கட்டாயமாக பிடித்து நிறுத்தியது. இதனால் கிண்டி சாலையில் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டவர்களை காவல்துறை இணை ஆணையர் நரேந்திரநாயர் தலைமையில் நூற்றுக்கணக்கான காவல்துறையினர் கயிறு கட்டி தடுத்து வெளியேற்றினர். ஐக்கிய விவசாயிகள் முன்னணி கொடுக்கும் இந்த மனுவை நான் வாங்க முடியாது. வேண்டுமானால் மாநில அரசிடம் கொடுத்து என்னிடம் வரட்டும் என்று கவர்னர் சொல்லியுள்ளதாக பின் தகவல் வந்தது. இதைக் கேட்டவுடன் தலைவர்களுக்கு மேலும் கோபம் ஏற்பட்டு மீண்டும் சாலை மறியலில் ஈடுபட தொடங்கினர்.

அப்போது காவல்துறை கூடுதல் ஆணையர் பிரேம், அங்கு வந்து தலையிட்டு இரவு 8 மணி அளவில், தமிழ்நாடு அரசின் மக்கள் தொடர்பு மற்றும் துயர் துடைப்பு செயலாளர் ஜெகநாதன் அவர்களை சந்தித்து ஜனாதிபதிக்கு அனுப்பும் மனுவை கொடுத்து பிரச்சினை முடிவுக்கு வந்தது. இருந்தும் சென்னை மாநகர காவல் துறையின் நம்பிக்கை மோசடியையும், கவர்னருடைய எதேச்சதிகாரத்தையும் கண்டித்து பின்னர் இயக்கம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

# இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**தமிழக அரசு மின்கட்டணம், சொத்துவரி மற்றும் பால்விலை ஆகியவற்றை உயர்த்தியதை திரும்பபெறக் கோரியும் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சார்பில் நவ. 29 அன்று தமிழக தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**



மின்கட்டண உயர்வை திரும்ப பெற்றிடு! மாதந்தோறும் மின்கட்டணத்தை கணக்கீடு செய்திடு! மின்வாரியத்தின் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்பிடு! ஸ்மார்ட் மீட்டர் கணக்கெடுப்பு திட்டத்தை கைவிடு! சொத்துவரி உயர்வை திரும்ப பெற்றிடு! பால்விலையை குறைத்திடு! ஒன்றிய அரசின் நிர்பந்தங்களுக்கு பணிந்து போகாதே! ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஆர்பாட்டம் நடைபெற்றது.

- தஞ்சை வடக்கு மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் டி.கண்ணகி தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது. எம்,ராஜலட்சுமி, க.கண்ணகி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.
- கோயம்பத்தூர் மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் நிர்மலா மருதக்குட்டி தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில்

தொடர்ச்சி 15ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# அரசியல் அமைப்பு நிலை பணிகளை தொடர்வோம் - 3



பேரன்புமிக்க தோழர்களே!

**அரசியல் நிகழ்ச்சிப் போக்குகள் நமது அரசியல் பணியை தீவிரப்படுத்தவும், அமைப்பு நிலை கடமைகளில் முனைப்புடன் ஈடுபடவும் வலியுறுத்துகிறது. ஆம், அரசியல், அமைப்பு நிலை என இரு கடமைகளையும் ஒரு சேர தொய்வின்றி தொடர்ந்திட வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.**

ஆளுநர் என்பவர் மாநில அரசின் தலைவராக கருத வேண்டும் என்கிறது அரசியலமைப்பு சாசனம். ஆனால், மக்களாட்சி முறையில் மாநில அமைச்சரவையின் ஆலோசனை பெற்று, அதன்படி செயல்பட வேண்டியவர் ஆளுநர்.

ஆனால், பாஜக ஒன்றிய அரசு எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தலையீட்டுக்கு வசதியாக ஆளுநர்களை நியமிக்கிறது.

தமிழ்நாட்டிற்கு ஆளுநராக திரு.ஆர்.என். ரவி நியமிக்கப்படும் நேரத்திலேயே அவரது தகுதிகள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன.

மாற்றுக் கருத்துக்களை விரும்பாத, ஆக்கபூர்வ விமர்சனங்களைக் கூட சகித்துக் கொள்ள முடியாத ஆர்.எஸ்.எஸ். வழிநடத்தும் பாஜக ஒன்றிய அரசு, காவல்துறையில் பணியாற்றிய ஆர்.என். ரவியை தமிழ்நாட்டின் ஆளுநராக பரிந்துரைத்தது. குடியரசுத் தலைவரும் அதனை ஆமோதித்து நியமனம் செய்துள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் அதிகார அத்துமீறவில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் செயல்பாடுகளுக்கு இடையூறுகளையும், தடைகளையும் உருவாக்கி வருகிறது

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஆளுநர் ஆர்.என். ரவியின் அத்துமீறலை தடுக்க வேண்டிய கட்டாயம் ஜனநாயக சக்திகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் தான் தமிழ்நாட்டில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கும் மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், தோழர்கள் கே.சுப்பராயன், எம்.செல்வராசு உட்பட எல்லோரும் கூட்டாக குடியரசுத் தலைவருக்கு ஒரு விரிவான விண்ணப்பம் தயாரித்து, அவரிடம் வழங்கியுள்ளனர்

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டுள்ள அந்தவிண்ணப்பத்தில் ஆளுநர் ஆர்.என். ரவியின் அத்துமீறலை பட்டியலிட்டு, இனியும் அவர் தமிழ்நாட்டின் ஆளுநராக நீடிப்பதை ஏற்க இயலாது என கூறியுள்ளனர்

தமிழ்நாட்டின் நடாளுமன்ற உறுப்பினர்களின் புகார் விண்ணப்பத்தை பெற்றுக் கொண்ட குடியரசுத் தலைவர், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார் என தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

அரசிலமைப்புச் சட்டத்தின் செயப்பாட்டை சரிபார்த்து, கண்காணித்து, அதில் அத்துமீறல், திசை திருப்பம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய கடமைப் பொறுப்புள்ள மாண்புமிகு குடியரசு தலைவர் என்ன முடிவு எடுக்கப் போகின்றார்?

தமிழ்நாடு ஆளுநரின் அதிகார அத்துமீறல் குறித்து புகார் கூறியிருப்பது தமிழ்நாட்டு மக்களால் தேர்வு செய்யப்பட்ட மக்களவை உறுப்பினர்களில் 38 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்களில் 11 பேரும் என 49 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதால், அதனை தமிழ்நாட்டு ஒட்டு மொத்த மக்களின் கோரிக்கையாகவே குடியரசுத் தலைவர் கருத்தில் கொள்வார் என நம்புகிறோம்.

மேதகு ஆளுநர் ரவி அவர்களுக்கும் நமக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நேரிடை பகை ஏதும் கிஞ்சிற்றும் இல்லை என்பதனை எல்லோரும் அறிவார்கள்.




ஆளுநர் ரவி அவர் வகிக்கும் மிக உயரியபொறுப்புக்குஏற்ற "பண்பாளராக" நடந்து கொள்ளவில்லை.

சிலர் உயரிய பொறுப்புகளை வகிக்கும் போது, அவர் வகிக்கும் பொறுப்பிற்கு பெருமை கூடுகின்றது. அவர்களது நடவடிக்கை நல்ல முன்னுதாரணமாகிறது.

இதற்கு மாறாக பெருமைக்குரிய பொறுப்புகளில் ஓரிருவர் அமரும் போது, அந்தப் பொறுப்பான இடமே அவமானத்திற்கு ஆளாகிறது.

இதில் ஆளுனர் ரவி எந்த வகையைச் சார்ந்தவர் என்பதனை எவரும் எளிதில் அறிவர்

அனுபவத்தில் உணர்ந்த உண்மையில் இருந்து தான் மோடியின் ஒன்றிய அரசே, ஆளுநர் ஆர்.என். ரவியை திருப்பப் பெறுக ! என்ற முழக்கம் தமிழ்நாடு முழுவதும் எதிரொலிக்கிறது.

நமது கட்சியின் மாநில நிர்வாகக்குழுக் கூட்டம் 13.11.2022ல் நிறைவேற்றிய தீர்மானத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி நீக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணங்கள் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த, மாநில உரிமைகள் தொடர்பான அத்தீர்மானம் முழுமையும் ஜனசக்தியில் வெளிவந்ததை வரி விடாமல் படித்து இருப்பீர்கள்!

ஆளுநர், அரசியல் அமைப்பு சட்டத்தை மதித்து பின்பற்றி செயல்பட வேண்டியவராவார்.

ஆனால் அவரோ அரசியல் அமைப்பு சட்டத்தை அவமதிக்கின்றார். சிறுமைப் படுத்துகிறார். இன்னும் சரியாக சொன்னால், நாட்டையும், நாட்டு மக்களையும், அரசியல் அமைப்புகளையும் வழிநடத்தி வருகின்ற அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறார்.

மதச்சார்பின்மையை கொள்கை நிலையாக ஏற்று, அதனை அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை பண்பாக கொண்டுள்ளது. மக்கள் அதனை போற்றி பின்பற்றி வருகின்றார்கள்

அதுதான் நமது நாட்டை வேற்றுமையில் ஒற்றுமை காணும் தனித்துவம் வாய்ந்த நாடாக வளர்த்துள்ளது. பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கலாச்சார மரபுகள், உணவு உண்பதில், உடை உடுத்துவதில் என பல வேறுபாடுகள் நிலவி வரும் போது, ஒற்றுமையாக, சகோதரத்துவம் மிளிர, அன்னை நாட்டை பாதுகாத்து வருவதை பார்த்து, உலக நாடுகள் வியந்து பார்க்கின்றன.

நாட்டின் ஒற்றுமை பற்றி, கவலைப்படாத ஆளுநர்ரவி, மதச்சார்பற்ற பண்பை அலட்சியப்படுத்துகின்றார்; அவமதிக்கின்றார்.

"உலகில் உள்ள நாடுகள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு மதம் சார்ந்த நாடாகத்தான் உள்ளது. அதுபோல் இந்தியாவும் மதம் சார்ந்த (இந்து) நாடு தான்" என்கிறார்.

ஆளுநரின் இந்தக் கருத்து அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது இல்லையா?

அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக, எதிராக பேசக் கூடிய ஒருவர் ஆளுநராக நீடிக்கலாமா? கூடாது!

சாதியின் பேரால் மக்களை பிளவுபடுத்துவது சனாதானம்! இதன் விளைவாக சமூக அமைதி என்ன பாடுபடுகிறது என்பதை அனைவரும் அறிவர்.

சாதிய கட்டமைப்பால் ஏற்படும் துயரங்களை வன்கொடுமைகளை எதிர்த்து மக்கள் போராடி வரும் சூழலில், ஆளுநர் ரவி மக்களை ஒற்றுமைப்படுத்துகிறது "சனாதானம்" என்கிறார்.

திரு ஆர்.என்.ரவி சனாதானத்தை ஏற்றுக் கொள்கிற நபர், இவர் எவ்வாறு ஆளுநராக இருக்க முடியும்?

சாதிகளை ஏற்று அங்கிகரித்து, சாதிப்பற்றளராக உள்ள ஒரு நபர் எவ்வாறு ஆளுநராக இருக்க முடியும்?

"வள்ளுவம் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என பெருமை ததும்ப பாடினார் மகாகவி பாரதி.

உலகப் பொதுமறையாம் "திருக்குறள்" இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டது என சிறுமைப் படுத்துகிறார். இந்த அறிவு சூனியத்தை எப்படி ஆளுநராக ஏற்றுக் கொள்ள முடியும்?

மோடியின் ஒன்றிய அரசு புதிய தேசிய கல்விக் கொள்கை எனக் கூறி, "நவீன குலக் கல்வித் திட்டத்தை" செயல்படுத்த முனைப்புக் காட்டி வருகிறது.

புதிய தேசியக் கல்விக் கொள்கையை தமிழகம் மட்டுமல்ல, நாடே எதிர்க்கின்றது காரணம் அக் கொள்கையானது படு பிற்போக்குத்தனமான நாட்டு மக்களை பின்னுக்கு இழுத்து, இருள் நிறைந்த காட்டு வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லும் நோக்கம் கொண்டது.

நாடு நிராகரித்துள்ள மனுதர்ம சட்டத்தை, பாஜக ஒன்றிய அரசு கல்விக் கொள்கையின் பெயரால் அமல்படுத்த முயற்சிக்கிறது!

காலங்காலமாக கல்வி மறுக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும், உயர் கல்வி வாய்ப்பு இல்லை என மறுக்கும் தீங்கான கல்விக் கொள்கைக்கு ஆளுநர் ஆதரவாக செயல்படுகிறார்.

தமிழக மக்கள் அதனை ஏற்க வேண்டுமென கூறுகின்றார் இவரை எங்ஙனம் ஆளுநராக ஏற்க முடியும்?

திரு.ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் நீண்ட நெடுங்காலம் சிறைவாசம் இருந்து, வயது மூப்பு, உடல்நலிவுக்கு ஆளாகி

தொடர்ச்சி 3ம் பக்கம்

2 ம் பக்கத் தொடர்ச்சி

யிருந்தவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இதனை மாநில அரசும் ஆதரித்தது சட்டமன்றத்திலும், அமைச்சரவையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நடந்த வழக்கில், ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்று, நீண்ட சிறைவாசம் இருப்பவர்களை விடுதலை செய்வது குறித்து, மாநில அரசு முடிவெடுக்கலாம் என கூறிவிட்டது

இவ்வளவுக்கும் பிறகு தமிழ்நாடு அமைச்சரவை நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தை ஆளுநர் ஏற்கவில்லை.

அமைச்சரவையின் ஆலோசனை பெற்று செயல்பட வேண்டிய ஆளுநர், அமைச்சரவை தீர்மானத்தை அலட்சியப்படுத்தியதால், உச்சநீதிமன்றமே ஆறு பேரையும் விடுதலை செய்தது. அத்துடன் விடவில்லை ஆளுநரின் பொறுப்பற்ற செயலை உச்ச நீதிமன்றம் கடுமையாக விமர்சனம் செய்துள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உச்சநீதிமன்றத்தின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ள ஆளுனர் ரவி தார்மிக பொறுப்பேற்று ராஜினாமா செய்திருக்க வேண்டாமா?

சட்டப்பேரவையில், மாநில மக்கள் நலன் சார்ந்த மசோதாக்களை நிறைவேற்றப்படுகின்றது. அவைகள் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் உள்ளிட்ட இருபது சட்ட மசோதாக்கள் அனுப்பப்பட்டுள்ளன., அவைகள் அனைத்தும் ஆளுநர் மாளிகை கிடப்பில் போட்டு வைத்துள்ளது.

மாநில மக்கள் வாக்களித்து அமைத்துள்ள சட்டமன்ற ஜனநாயகம் பெரிதா?

ஒன்றிய அரசின் பரிந்துரை ஏற்று நியமிக்கப்படும் ஆளுநரின் அதிகாரம் பெரிதா?

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் கூட்டத்தை ஆளுநரே கூட்டுகின்றார். மாநில முதலமைச்சருக்கோ, அல்லது உயர் கல்வித் துறை அமைச்சருக்கோ எவ்வித தகவலும் தரப்படவில்லை. அந்தக் கூட்டங்களுக்கான அழைப்பும் இல்லை.

அரசின் தலைவர் என்ற வாய்ப்பை பயன்படுத்தி, மாநில அரசின் அதிகாரத்தை பறித்து வருகிறார். தான்தோன்றித்தனமாக உத்தரவுகளை பிறப்பிக்கின்றார்.

சுருங்கக் கூறின் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசுக்கு எதிராக, போட்டி அரசாங்கத்தை ஆளுநர் ரவி நடத்துகிறார். இதன் மூலம் அரசிலமைப்பு நெருக்கடியை ஏற்படுத்துகிறார்.

இதன் மூலம் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்த, மக்கள் அரசையும், தமிழக மக்களை அவமதிக்கின்றார்! அவமானப்படுத்துகின்றார்.

இப்படிப்பட்ட ஜனநாயக விரோதியை எவ்வாறு ஆளுநராக ஏற்க இயலும்?

ஆளுநர் மாளிகை பிரம்மாண்டமாக உள்ளது. மிகப் பெரிய தோட்டத்தில் மரங்களும், செடிகளும் நிரம்ப உள்ளன. மான்கள் சுற்றித் திரிகின்றன. அவைகளுக்கு வேண்டிய உணவும் தண்ணீரும் எளிதில் கிடைக்கின்றன. ஆளுனர் மாளிகை பராமரிப்பு, அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கான ஊதியம், அச்சமின்றி பவனி வர உரிய பாதுகாப்பு, ஆளுனருக்குரிய ஊதியம், அவர் நடத்தும் விருந்து, உபசரிப்பு என அனைத்து செலவினங்களையும் மக்கள் கொடுத்துவரும் வரிப்பணத்திலிருந்து மாநில அரசு செய்து வருகிறது.

அரசியல் அமைப்புச் சட்ட வழிகாட்டுதலை மாநில அரசு மதித்து, ஆளுநர் மாளிகையும், செயலகமும் இயங்க செலவிட்டு வருகின்றது.

மாநில அரசு அரசியலமைப்பு சட்டத்தை மதிக்கின்றது. ஆனால் ஆளுநர் அரசியலமைப்பு சட்டத்தை மீறுகிறார்.

ஆளுநர் மாளிகையை பாரதிய ஜனதா கட்சியின் மாநில அலுவலகமாக மாற்றி வருகின்றார்.

ஒரு கட்சி சார்ந்து செயல்படும் நபரை ஆளுனராக எவ்வாறு ஏற்க இயலும்?

நாடு முழுவதும் உள்ள பல கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு மோடியின் ஒன்றிய அரசு பச்சை துரோகமிழைத்துள்ளது.

ஓராண்டுக்கும் மேலாக நீடித்த விவசாயிகள் போராட்டத்தால், விவசாயிகள் விரோத சட்டங்கள் திருப்பப் பெறப்பட்டன.

ஒன்றிய அரசு குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயிக்க சட்டபூர்வ ஏற்பாடு செய்வதாக எழுத்துபூர்வமாக உறுதியளித்தது.

அந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தி கடந்த நவம்பர் 26ம் தேதி நாடு முழுவதும் விவசாயிகள் ஆளுநர் மாளிகை நோக்கி அணிவகுத்துச் சென்றனர் விவசாயிகள் கோரிக்கை மனுவை ஆளுநர்கள் மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்க ஐக்கிய விவசாயிகள் முன்னணி விடுத்த அழைப்பை ஏற்று, தமிழகத்திலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஆளுநர் மாளிகை நோக்கி அணிதிரண்டனர்.

தமிழக காவல்துறை குறிப்பிட்ட தூரம் வரை பேரணி செல்ல அனுமதித்தது. அதன் பின்னர் சங்க பிரதிநிதிகள் ஆளுநரை சந்தித்து கோரிக்கை விண்ணப்பம் அளித்திட ஏற்பாடு செய்தனர்.

காவல்துறையின் ஆலோசனையை ஏற்று அமைதியாக குறிப்பிட்ட தூரம் வரை பேரணி சென்று அதன் பின்னர் காவல்துறை ஏற்பாடு செய்திட்ட வாகனத்தில் சங்க பிரதிநிதிகள் ஆளுநர் மாளிகைக்கு சென்றனர்.

இரு கரம் கூப்பி சங்க பிரதிநிதிகளை வரவேற்று, அவர்கள் அளிக்கும் விண்ணப்பத்தை பெற்று, ஒன்றிய அரசுக்கு அனுப்பிட வேண்டிய பொறுப்பான ஆளுநர், சங்க பிரதிநிதிகளை நான் சந்திக்க மாட்டேன், அலுவலகத்தில் உள்ள யாரும் அவர்களிடத்தில் மனுக்களை பெறக் கூடாது என்று உத்தரவிட்டு, தமிழக விவசாயிகளையும், சங்க பிரதிநிதிகளையும் அவமானப்படுத்தி அவமதித்துள்ளார்!

குறைந்தபட்ச நாகரிகம் கூட இல்லாத நபரை எவ்வாறு ஆளுநராக ஏற்க இயலும்?

இவைகளை எல்லாம் கடந்து அண்மையில் நாகர்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில், ஆளுநர் ஆற்றிய அபத்தமான உரை அனைவரையும் கொந்தளிக்க செய்துள்ளது.

“இந்தியாவின் கலாச்சாரமும், பாரம்பரியமும் சில சக்திகளால் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. அதற்கு அறிவார்ந்த சமூகம் என அழைக்கப்படுகின்ற சில சக்திகள் உதவின. அவர்களில் ஒருவர் காரல் மார்க்ஸ்” என திருவாய் மலர்ந்துள்ளார்.

(தினமலர் 25.11.2022, திருச்சி மதிப்பு)

மிஸ்டர் ரவி அவர்களே, பூனைக்குட்டி மெல்ல, மெல்ல தலையை நீட்டும் எனக் கூறுவார்கள் தற்போது உங்களது உள் மன உணர்வை வெளிப்படுத்தியுள்ளீர்கள். “ஆட்டை




கடித்து, மாட்டைக் கடித்து பின் மனிதனை கடித்தது” என்பது போல், இப்போது உலகம் ஏற்றுக் கொண்ட பேரறிவாளரை தாக்கத் தொடங்கிவிட்டார்.

இந்தியாவின் கலாச்சாரத்தை, பண்பாட்டை மார்க்ஸ் அழிக்கவில்லை மாறாக சுரண்டல் அற்ற பொதுவுடைமை சமுதாயம் அமைய, பேரறிவாளர் காரல் மார்க்ஸ் வழிகண்டார் என்பதனை முற்றிலும் அறிந்தவர் மிஸ்டர் ரவி.

உலகத்தின் கண்டுபிடிப்புகளில் சமூக வளர்ச்சி விதிகளை விஞ்ஞான ரீதியாக கண்டறிந்தது. உபரி மதிப்பு என்ற உழைப்புச் சுரண்டல் தான் வறுமைக்கு காரணம் என்பதை மாமேதை மார்க்ஸ்சால் அறுதியிட்டு உறுதி செய்யப்பட்டது.

இந்த உண்மைகள் மிஸ்டர் ரவிக்கு நன்கு தெரியும்.

உலகில் இரு வர்க்கங்களே உள்ளன. அவை சுரண்டும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கம் என்பதும், சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக சுரண்டப்படும் வர்க்கமே ஒன்றுபட்டு போராடும் என்று ஓங்கி முழங்கியவர் மார்க்ஸ்.

“உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். அடையப்போவது பொன்னுலகம். உடையப்போவது அடிமை கை விலங்கு” என புதிய விடியலுக்கு வித்திட்டவர் மாமேதை மார்க்ஸ்

“மின்சாரம் இன்றி உலகம் இல்லை, மார்க்ஸ் இன்றியும் உலகம் இல்லை” என கவிப்பேரரசு வைரமுத்துவின் வைர வரிகளை மிஸ்டர் ரவி அருகில் இருப்பவரை கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

**“புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்**
**பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்**
**புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்**
**இதயமெலாம் அன்பு நதியில் நனைப்போம்**
**இதுஎனதென்னு மோர் கொடுமையைத் தவிர்ப்போம்”**

என முழங்கிய பாரதிதாசனின் பாடல் வரிகளையும் மிஸ்டர் ரவி படித்தறிய வேண்டும்.

ரஷ்ய புரட்சியை “ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி” என வரவேற்று வாழ்த்துக் கூறிய உலகமகாக் கவிஞர் பாரதியின் பாடல்களை ஆளுநர் பயிலவேண்டும்.

விஞ்ஞானம் வளர்ந்து கொண்டே இருப்பது போன்று, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மார்க்ஸின் மார்க்சியம் வளர்ந்த வண்ணம் ஜொலித்து வருகிறது.

பொதுவுடமை சமுதாயத்திற்கு மாற்று முதலாளித்துவம் அல்ல என்கிற பேருண்மையும் மிஸ்டர் ரவிக்கு தெரியும்.

கெட்டு, சீரழிந்து வரும் முதலாளித்துவத்தால் உலக மக்களுக்குக்கு விடியலை ஒரு போதும் தந்திட இயலாது என்பதும் மிஸ்டர் ரவிக்கு தெரியும்!

ஏற்றத் தாழ்வு இல்லாத பொதுவுடமைச் சமுதாயத்தால்தான் அனைத்து மக்களுக்கான மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை தரமுடியும் என்பதும் மிஸ்டர் ரவிக்கு தெரியும்!

அனைத்தும் அறிந்திட்ட ரவி, ஏன் மார்க்ஸை இழிவுபடுத்தும் ஈனச் செயலில் ஈடுபட்டு வருகிறார்?

அவர் அங்கம் வகிக்கும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உத்தரவை நிறைவேற்றும் “சேவகர்” என்பதை ஆளுநர் வெளிப்படுத்த தொடங்கியுள்ளார்.

மூன்று கூறுகளை உடைய சூலாயுதத்தை கொண்டுள்ளது தான் ஆர்.எஸ்.எஸ். என்கிற கொடூர அமைப்பு.

ஜனநாயகத்தில் எள் முனையளவும் நம்பிக்கையற்ற, சர்வாதிகாரத்தின் மீதும் அளவற்ற பற்றுடைய ஆர்.எஸ். எஸ். அமைப்பிற்கு மூன்று எதிரிகள்.

ஒன்று கம்யூனிஸ்ட்டுகள்
இரண்டு இஸ்லாமியர்கள்
மூன்று கிறிஸ்தவர்கள்
மார்க்சியம் வேண்டாம்
குரான் வேண்டாம்
பைபிள் வேண்டாம்

பின் எது வேண்டும்?

“மனுதர்மம்“ “இந்துத்துவா” வேண்டும்.

அதனைத்தான் மிஸ்டர் ரவி வெளிப்படுத்தியுள்ளார்.

ரவியாரே உங்களிடம் இதனைத்தான் எதிர் பார்த்தோம். மெல்ல தலையை நீட்டியுள்ளீர்.

முழுமையாக வெளியே வாருங்கள்! அப்போது தான் உங்கள் உண்மை சுயரூபம் வெளிப்படும். அப்போது தான் நீங்கள் யார்? யாருக்கான பிரதி நிதி? என்பதும் வெளிப்பட்டு மக்கள் உங்களை எளிதில் அடையாளம் காண முடியும்.

கயமைத்தனம் கொண்ட காவிக் கும்பலின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி, கோர முகத்தை கொண்ட காவிக் கும்பல் குறித்து...

நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட ஆயத்தமாவீர்!

ஆம், டிசம்பர் திங்கள் 29ஆம் நாள் தமிழக தலைநகர் நோக்கி ஆயிரமாய், பல்லாயிரமாய் அணிவகுக்க ஆயத்தமாவீர்!

டிசம்பர் 29ம் நாள், மோடி அரசே, நீங்கள் நியமனம் செய்த ஆளுனர் ரவியாரை திரும்ப பெறு என்கிற முழக்கம், சென்னை பட்டினம் மட்டுமல்ல நாடு முழுவதும் எதிரொலிக்கும் வண்ணம் எட்டு திசையிலிருந்தும் தலைநகர் நோக்கி அணிதிரள ஆயத்தமாவீர்!

நாம் நடத்தி வரும் ஜனநாயக பாதுகாப்பு போராட்டம் நாட்டில் உள்ள அனைவருக்கும் தெரியப்படுத்திட மாவட்டக்குழுக்களும், இடைக்குழுக்களும், கிளைகளும் சுவர் விளம்பரம் செய்து, மக்களை அணி திரட்டுங்கள்.!

துண்டு பிரசுரம் வெளியிடுவீர், தெருமுனைக் கூட்டங்களை ஆங்காங்கே நடத்திடுவீர்!

ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், ஒவ்வொரு கட்சிக் கிளையும், இடைநிலைக் குழுக்களும், மாவட்ட அமைப்புகளும் திட்டமிட்டு செயல்படுவீர்!

மாணவர் இளைஞர், மாதர், தொழிலாளர் விவசாயி, விவசாயத் தொழிலாளி, இலக்கியவாதிகள் என ஆர்ப்பரித்து அலைகடலென அணிவகுத்து வாருங்கள் போர்க்குரல் எழுப்ப, இன்றே, இப்போதே ஆயத்தமாவீர்!

மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

வணக்கம்!

தோழமைமிக்க,

இரா.முத்தரசன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 35

## கரடியே காறி துப்பிய காஷ்மீர் பைல்ஸ்!

கோவாவில் சமீபத்தில் நடந்து முடிந்த 53வது சர்வதேச திரைப்பட விழாவில் 79 நாடுகளைச் சார்ந்த 280 திரைப்படங்கள் திரையிடப்பட்டன. இந்நிகழ்ச்சியை ஒன்றிய அரசின் தகவல் ஒளிபரப்புத்துறை மற்றும் கோவா அரசும் இணைந்து நடத்தின.

வெறுப்பு அரசியலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட காஷ்மீர் பைல் படமும் இதில் திரையிடப்பட்டது. இப்படம் குறித்து இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த திரைப்பட இயக்குநரும், தயாரிப்பாளருமான நடாவ் லாபிட் கூறுகையில், இப்படத்தை பார்த்த தான் அதிர்ச்சி அடைந்ததாகவும், வெறுப்புணர்ச்சியைத் தூண்டும், பரப்பும் இத்திரைப்படம் இழிவானது என்றும், இது எப்படி திரைப்படக் கலைப் போட்டிகளில் அனுமதிக்கப்பட்டது என்பது தனக்கு தெரியவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இஸ்ரேலிய நாட்டைச் சார்ந்த தூதர் அதற்காக மன்னிப்புக் கேட்டதுடன் லிபிட்டை கண்டித்தும் உள்ளார். ஏனெனில் அங்கும் ஆள்வது இனவெறி அரசுதானே! அவர்கள் மொழியும் அப்படித்தானே இருக்கும்! ஆனால் இஸ்ரேலியரான லிபிட் பாலஸ்தீன மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுப்பவர். காஸா எல்லைப் பிரச்சினையில் பாலஸ்தீனர்களுக்கு என்று ஆதரவு கொடுக்கும் ஒரு உண்மையான மனிதநேயவாதி!

இக்காஷ்மீர் பைல்ஸ் டிரைலர் வெளியானபோதே இந்துக்களை இஸ்லாமியர்கள் தாக்குவது போன்றும் இரு சமூகத்திற்கு இடையே வெறுப்புணர்வை தூண்டுவதாக இருப்பதாகவும் விமர்சனங்கள் வந்தன. 1990 களின் கால கட்டத்தில் காஷ்மீரில் பண்டிட்டுகளுக்கு எதிராக நடந்த தாக்குதல்களை மையமாகக் கொண்டு விவேக் அக்னிஹோத்ரி இயக்கி, நடிகர் அனுபம் கேர் நடித்தது இப்படம்.

இந்தப் படத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட விமானப்படை வீரர் ரவி கன்னாவின் மனைவி நிர்மல் கன்னா ஜம்மு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தன் கணவர் குறித்த சர்ச்சைக்குரிய காட்சிகள் நீக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார். அந்த காட்சிகளை நீக்க நீதிமன்றமும் உத்தரவிட்டிருந்தது. இதுதான் உண்மையைப் பேசும்படமாம்! கரடியே காறித் துப்பிய சம்பவம் போன்றதுதான் இது! நிலைமை இப்படி இருக்க படம் வெளியான பின்பு பிரதமர் மோடி அப்படக்குழுவினரை அழைத்து வெகுவாக பாராட்டி வாழ்த்தும் தெரிவித்தார். பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் வரிச்சலுகை கொடுத்து ஆதரவு நல்கியது.

குஜராத், ஹரியானா, மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் 100% வரிவிலக்கு அளித்திருந்தன. மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் இந்தத் திரைப்படத்தை காண்பதற்காக மாநில காவல்துறையினர் அனைவருக்கும் விடுமுறை அளித்து படத்தை பார்க்க வைத்தார்.

ஆனால், கதை களமான 1990ல் காஷ்மீரில் நடந்த பண்டிட்டுகளின் இடப்பெயர்வின்போது, அங்கு கவர்னராக இருந்தது ஆர்.எஸ்.எஸ். காரரான ஜக்மோகன் ஆவார். அவர்தான் பண்டிட்டுகளை இடம்பெயரச் சொன்னவர். இந்த கால கட்டத்தில் பா.ஜ.க.வும் சங்கப் பரிவாரங்களும் இப்பிரச்சனையைப் பற்றி பேசாமல் அயோத்தி ராமர் கோவில் பிரச்சினையை எழுப்பி நாடு முழுவதும் இந்து முஸ்லீம் பிரிவினையை ஏற்படுத்தி அரசியல் அறுவடைக்கு தயாரானது.

அதற்குப் பின் மத்தியில் இரண்டுமுறை ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அவர்களது மீள் குடியேற்றம் குறித்து எந்த நவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆனால், மீண்டும் வாக்குகளை அறுவடை செய்ய தனது வெறுப்பு அரசியலுக்கு வலு சேர்க்க பா.ஜ.க.வும் அதன் மூத்த தலைவர்களும் இன்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

கலை இரண்டு பக்கமும் கூர்மையான வாள். அதனை மிகவும் கவனமாக கையாள வேண்டும் என்றார் லெனின்! கலை உள்ளத்தின் வெளிப்பாடு அது உணர்வை வெளிப்படுத்துவதுடன் பிறருக்கு அவ்வுணர்வை கடத்தும் பெருமையையும் உடையது என்றார் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய்!

நேயத்தையும், நல்லிணக்கத்தையும் வளர்க்க வேண்டிய கலைப்படைப்புகள் சில நேரங்களில் வன்மங்களையும், குரோத வெறி உணர்வுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. இப்படிப்பட்ட படைப்புகள் எப்போதும் அதிகாரத்திற்கும், முதலாளித்துவ நலன்களுக்குமே சேவகம் செய்கின்றன.

நமது கேள்வி 2002ல் குஜராத்தில் நடந்த இனப் படுகொலையை தலைமையேற்று நடத்திய சங்கப் பரிவார தலைவர்கள்! முதல்வராக இருந்த மோடியின் மோன நிலை! இது குறித்துதான் உண்மையில் "குஜராத் பைல்ஸ்" என்ற திரைப்படம் எடுக்கப்பட வேண்டும். மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்!

இப்படிப்பட்ட முயற்சிகள் திரைத்துறையில் துளிர்த்தபோது அதற்கு முழுமையான தடையை பா.ஜ.க. அரசுகள் விதித்ததை வசதியாக யாரும் மறந்துவிட முடியாது.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

தனக்கு ஒரு குற்றம் வருவதற்கு முன்பே வராமல் காத்துக் கொள்ளாத அரசு, நெருப்பிற்கு முன் வைக்கப்பட்ட வைக்கோல் போல அழிந்துபோகும் என்று எச்சரிக்கிறது குறள்!

உரியவர்கள் காதுகளுக்கு எட்டினால் சரி!.

# காசியில் நடந்தது தமிழ் சங்கமமா? அஸ்தமமா?



என்.எஸ்.பிரதாப் சந்திரன்

உத்தரபிரதேச மாநிலத்தின் காசி நகரத்தில் தமிழ் சங்கமம் என்னும் நிகழ்வை சென்னை ஐ.ஐ.டி. ஒருங்கிணைத்ததாக சொல்கிறார்கள். இந்நிகழ்வில் இந்திய பிரதமர் மோடி அவர்களும், உத்திர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

காசி-தமிழ் சங்கமம்
काशी - तमिल संगमम्
Kashi-Tamil Sangamam

இதில் இந்தியா முழுவதும் இருக்கிற தமிழ் ஆர்வலர்கள் பங்கேற்றத்தை விட, சங்கீகள் தான் அதிகமாக பங்கேற்று இருக்கிறார்கள். சங்கிகளின் திடீர் தமிழ் பற்றை எண்ணி நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை

இந்தியாவில் பல மாநிலங்கள், பல மொழிகள் இருக்க இவர்களுக்கு திடீரென தமிழ் மீது ஏன் பாசம் பொங்கி வழிகிறது.

மொழிகளின் தொன்மை சிறப்புகளும் இலக்கண, இலக்கிய வளங்களும் கொண்ட ஆதி மொழிகள் இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு, சீனம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய ஆறு மொழிகளாகும். இவற்றில் இன்னும் இளமையோடும் உயிர்த்துடிப்போடும் உலக வழக்கத்தில் பத்து கோடிக்கும் அதிகமான மக்கள் பேசும் மொழி தமிழ் மொழியாகும் இதனால்தான் இது உயர்தனிச் செம்மொழி என அழைக்கப்படுகிறது

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் அடர்த்தியாகவும், தென்னாப்பிரிக்கா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, பர்மா போன்ற நாடுகளில் பரவலாகவும் பேசப்படும் மொழி தமிழ்.

இப்படி சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியை இந்திய ஒன்றிய, மாநில தொடர்பு அலுவல் மொழியாக. உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என தமிழகம் ஒருமித்த குரலில் சொல்லியபோதும் காதில் போட்டுக் கொள்ளாத மோடி அரசு. இதற்கு எதிர்மறையாக இந்தியை தீவிரமாக திணித்து வருகிறது.

இப்படிப்பட்டவர்கள் திடீரென தமிழ் மொழியை புகழ்வது புகழ்ச்சியா? வஞ்சப் புகழ்ச்சியா? என்ற கேள்வி எழுகிறது.

இதுவரை இந்தியாவில் 1652 மொழிகள் பேசப்பட்டு, அவை 417 மொழிகளாக சுருங்கி, பின்னர் அதிலும் 18 மொழிகள் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிகளாக இன்னும் சுருங்கி போய்விட்டது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகளின் கல்லறைகளின் மீதுதான் 'இந்தி' எனும் மொழி மாளிகை கட்டப்பட்டு இருக்கிறது. பாவப்பட்ட பல பழங்குடி மக்களின் மொழிகள் பாழ்படுத்தப்பட்டது, தங்கள் தாய்மொழி எது என்று அறியாமலேயே வேற்று மொழியை தங்கள் தாய் மொழியாக எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை தமிழுக்கும் ஏற்பட வேண்டுமா?

சிவனின் வாயிலிருந்து வந்தது இரண்டு மொழிகள். ஒன்று சமஸ்கிருதம், மற்றொன்று தமிழ் என்கிறார்கள். அப்படி என்றால் ஏன் தமிழில் வழிபாடு நடத்தினால் சிவனுக்கு புரியாது என்கிறீர்கள் ?. சமஸ்கிருதத்தில்தான் வழிபாடு நடத்த வேண்டும் என சொல்கிறீர்கள்?. தமிழ் நீச பாசை, சமஸ்கிருதம் தேவ பாஷை என்கிறீர்களே ஏன்? ஒரே இறைவன் பெற்றெடுத்த இரண்டு குழந்தைகள்தான் சமஸ்கிருதமும் தமிழும் என்றால் இவற்றில் "பேதம்" எதற்கு? இந்த இரண்டு மொழிகளை மட்டும் சிவன் வாயிலிருந்து வந்தது என்றால்? மற்ற மொழிகள் யார் வாயிலிருந்து வந்தது. இப்படித்தான் எதிலும் இரட்டை வேடம் போடும் பித்தலாட்டக்காரர்கள் சங்கிகள்.

'தமிழை வளர்ப்பது ஒவ்வொரு இந்தியர்களின் கடமை' என அலங்காரமாக அறிவிக்கிறார் பிரதமர் மோடி. செம்மொழிகளான தமிழின் வளர்ச்சிக்கும், சமஸ்கிருத வளர்ச்சிக்கும் மோடி அரசு செய்துள்ள பங்களிப்புக்கள் என்ன? 2018 முதல் 2020 வரை மூன்றாண்டு காலத்தில் சமஸ்கிருத வளர்ச்சிக்கு 643 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. ஆனால் தமிழ் மொழிக்கு ஒன்றிய அரசு இந்த மூன்றாண்டுகளில் வெறும் 22 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கி உள்ளது. இதுதான் தமிழ் மொழியை வளர்க்கும் லட்சணமா?

இந்தியாவில் 18 சமஸ்கிருத பல்கலைக்கழகங்களை மத்திய அரசு உருவாக்கி உள்ளது. அதுமட்டுமின்றி 2019ல் நாடாளுமன்றத்தில் மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழக மசோதா கொண்டுவரப்பட்டு ராஷ்ட்ரிய சமஸ்கிருத சன்ஸ்தான, ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி ராஷ்ட்ரிய சமஸ்கிருத வித்தியாபித், ராஷ்ட்ரிய சமஸ்கிருத சன்ஸ்தான் திருப்பதி ஆகிய மூன்று மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டது.

வெறும் 24 ஆயிரம் பேர் மட்டுமே சமஸ்கிருத மொழியை பேசுவதாக சொல்லப்படுகிறது. அப்படி இருக்கையில் சமஸ்கிருதத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் மத்திய அரசு தமிழுக்கு இதுவரை என்ன செய்திருக்கிறது? வெறும் வாயால் வடை சுட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் அங்கீகரிகட்ட தேசிய மொழிகளாக 18 மொழிகள் உள்ளபோது, இந்திக்கும், சமஸ்கிருதத்திற்கும் மட்டும் ஏன் மத்திய அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஒரே நாடு ஒரே மொழி என இந்தியை அனைவர் மீதும் ஏன் திணிக்க முயற்சிக்கிறது? என்ற கேள்வி எழுகிறது. இதை திசைத்திறப்பவே இந்த சங்கமம் எனும் நாடகம்!

சங்கமம் தொடக்க விழா நிகழ்வில் ஒன்றிய பிரதமர் உள்ளார். உத்தர பிரதேச முதல்வர் உள்ளார். தமிழக முதல்வர் ஏன் இல்லை?. தமிழக அரசியல் ஆளுமைகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியக் கர்த்தாக்கள் யார் யார் பங்கேற்றார்கள்? இதில் ஒரே ஒரு 'ஜால்ரா 'சத்தம் மட்டும்தான் அபசுரமாய் ஒலித்தது. தமிழர்களே இல்லாத தமிழ் சங்கமமா? இதை தமிழ் சங்கமம் என்று சொல்வதைவிட சங்கிகளின் சங்கமம் என்று சொல்லலாம். தமிழர்கள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தார்களே தவிர, சங்கிகளை வைத்து அல்ல!

எத்தனையோ மொழிகள் இந்தி மொழியுடன் சங்கமித்ததால் காணாமல் போயின. அந்த நிலை தமிழுக்கும் ஏற்பட வேண்டுமா? மகாராஷ்டிரா தலைநகர் பம்பாயில் மராட்டி மொழி பேசப்படுகிறதா? கர்நாடக தலைநகர் பெங்களூரில் கன்னடம் பேசப்படுகிறதா? ஆந்திரா தலைநகர் ஹைதராபாத்தின் நிலை என்ன? இதை அறியாதவர்களா தமிழர்கள்?

இந்தி, அனைத்து அழித்த மொழிகள் எத்தனை எத்தனை? அவை போன இடங்கள் எங்கே?. தமிழை எதிர்த்து அழிக்க முடியாது என்பதால் தான் அனைத்து அழிக்க முடிவு செய்துள்ளார்கள் சங்கிகள். காசி ஆன்மீக 'முக்தி' தளம் என்பார்கள். அங்கே தமிழுக்கும் முக்தி தர எண்ணுகிறார்கள் காவிகள். அவர்கள் எதிர்பார்ப்பது மொழிகளில் சங்கமம் அல்ல, தமிழின் அஸ்தமனம். எனவே விழிப்போடு இருப்போம். காவிகளை வீழ்த்தி வெற்றி பெறுவோம்.

தொடர்புக்கு: 93826 79798

## எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு அஞ்சலி

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் முன்னாள் தகஇபெ மாநில பொதுச்செயலாளர் எழுத்தாளர் தனுஷ்கோடிராமசாமி நினைவு நாள் நிகழ்வு நடைபெற்றது. கிளை செயலாளர் நவநீதகிருஷ்ணன் தலைமை வகித்தார். தகஇபெ மாநில பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், சரஸ்வதி,



மருத்துவர் மலர்விழி, சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், கவிஞர்கள் வைர.விஜயன், கலிங்கல் சுவாமிநாதன், கணேசன், ஆர்.பாஸ்கரன் உள்ளிட்டோர் தனுஷ்கோடி ராமசாமி படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

# இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் ஏ.ஐ.டி.யூ.சி. என்பதில் பெருமை கொள்கிறேன்

**தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டட தொழிலாளர் சங்கத்தின் 8 வது மாநில மாநாடு ராணிபேட்டை நவல்பூரில் கடந்த 16,17ம் தேதிகளில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வே. கணேசன் பேசியதாவது:**

## அமைச்சர் சி.வெ.கணேசன் பேச்சு

ஆன்லைன் பதிவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆன்லைன் பதிவு சரிவர செயல்படாத நிலையில், உறுப்பினர் பதவு நேரடியாகவும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி உதவித்தொகை ஆறாம் வகுப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓட்டு போட்டவர்களுக்கும், ஓட்டு போடாதவர்களுக்கும் சேர்த்தே முதலமைச்சராக செயல்பட்டு வருகிறார். ஓட்டுபோடாதவர்கள் நாம் இவருக்கு ஓட்டு போடாமல் போய்விட்டோமே என்று வருத்தப் படும் அளவிற்கு அவரது செயல்பாடுகள் இருக்கிறது.

இருந்தது. கொரோனா காலத்தில் நாம் வீடுகளில் இருந்தபடி கருப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம். ஒன்றிய அரசு நிவாரமாக ரூ.7,000 நிதியும், மாநில அரசு ரூ.5000 நிதியும் குடும்ப அட்டைகளுக்கு வழங்க வேண்டும் என்று கூறினோம்.

ஒன்றிய அரசு இதுவரை ஒரு பைசா கூட வழங்கவில்லை. மாநில அரசு ஸ்டாலின் ஆட்சி அமைந்ததற்கு பின்னால் குடும்ப அட்டைக்கு நான்காயிரம் ரூபாய்








ஏ.ஐ.டி.யூ.சி. சங்கம் 1920 ல் உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் ஏ.ஐ.டி.யூ.சி. தான் என்பதில் பெருமை கொள்கிறேன்.

1918 மார்ச் 2ம் தேதி சென்னை பின்னி மில் ஆலை போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் பத்தாயிரம் பேர்கள் திரண்டார்கள் என்பதை அறிகிற போது, மிகவும் பெருமையாக உள்ளது. அந்த போராட்டத்திற்கு சக்கரை செட்டியார் தலைவராக செயல்பட்டார். அது தமிழகத்தில் தொழிற்சங்கத்திற்கு அடித்தளமாக அமைந்தது. இந்தியாவில் தொழிலாளர்கள் சட்டங்கள் உருவாவதற்கு ஏ.ஐ.டி.யூ.சி. சங்கம்தான் தான் காரணமாக இருக்கிறது.

இந்த ஆட்சி தொழிலாளர்கள் நலனில் அக்கறையுள்ள ஆட்சி. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைத்த உடனே, முதற்கட்டமாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறநலத்திட்டங்கள்குறித்து ஆராய்ந்து லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது.

உடனடியாக அவர்களுக்கு நலத் திட்டங்கள் போய்சேர வேண்டும் என்று நான் முதல்வரிடம் எடுத்துக் கூறினேன். அவர் அதற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினார். முதல் கட்டமாக ஐம்பதா யிரம் தொழிலாளர்களுக்கு சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நலத்திட்ட பலன்களை வழங்கினோம்.

இரண்டாவது முறையாக 57 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட பலன்கள் வழங்கப்பட்டது. இன்னும் இருபதாயிரம் பேருக்கு மேல் பலன்கள் போய் சேராமல் இருக்கிறது என்பதை அறிகிறோம். அதையும் உடனடியாக கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாரியத்தில் உறுப்பினர் பதிவு

முதல் ஒன்பதாம் வகுப்பு வரை ஆயிரம் ரூபாயாகவும், பத்தாம் வகுப்பிற்கு 2,400 ரூபாயாகவும், 11, 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.3000ம், பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 4000 ம், உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ. 6000 ம் உதவித்தொகை வழங்க இந்த அரசு உத்தரவிட்டுள்ளது.

இயற்கை மரணத்திற்கு ரூ.20,000 என்று இருந்ததை ரூ.50,000 மாக உயர்த்தியும், விபத்து மரணத்திற்கு ரூ.2 லட்சம் என்று இருந்ததை ரூ.5 லட்சம் என்று உயர்த்தியும் இந்த அரசு உத்தரவிட்டுள்ளது.

கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஒரு லட்சம் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள ரூ 4 லட்சம் வழங்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல் வருடம் கோரிக்கை வைத்தேன். ஒரு லட்சம் தொழிலாளர்களுக்கு தலா நான்கு லட்சம் என்பது மிகப் பெரிய தொகையாக இருக்கிறது. எனவே, முதற்கட்டமாக பத்தாயிரம் பேர்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம், உடனடியாக 103 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நேற்று வீடு கட்டிக் கொள்ள நிதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இது கடன் அல்ல முழுக்க முழுக்க அரசின் நலத்திட்டம். ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற் சங்கத்தினர் தொழிலாளர்களின் எந்தவித கோரிக்கையானாலும் நேரடியாக என்னிடத்திலே சொன்னால் அது உடனடியாக தீர்க்கப்படும்,' என்றும் அமைச்சர் கணேசன் பேசினார்.

### கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி

மாநாட்டில் முதல் நாள் நிகழ்வில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பேசியதாவது:

1993ல் கட்டுமான தொழிலாளர் நல வாரியம் கொண்டுவரப்பட்டது. முதற் கட்டமாக பத்தாயிரம் பேருக்கு வீடு கட்டுவதற்காக தலா ரூபாய் 4 லட்சம் நலநிதி வழங்க நம்முடைய அரசு அறி வித்திருக்கிறது. சென்னை மழைநீர் வடிகால் தேங்காதவாறு சரி செய்யப்பட்டுள்ளது.

**கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ.க்கள் தாங்கள் வாங்கும் சம்பளத்தை கட்சி அலுவலகத்தில் கொடுத்து விட்டு, கட்சி கொடுக்கும் சம்பளத்தை பெற்றுக் கொண்டு வாழ்கிறார்கள் அவர்களைப் போல எங்களால் எளிமையாக வாழ முடியாது.**

பா.ஜ.க. முறியடிக்கப் பட்டால் தான் நாடும், வீடும், கலாச்சாரமும் பாதுகாக்கப்படும் என்று அமைச்சர் காந்தி பேசினார்.

### இரா.முத்தரசன்

இரா. முத்தரசன் பேசும்போது, சென்ற மாநாடு நடைபெற்ற காலத்தில் அதிமுக அரசு பதவியில் இருந்தது. இ.பி.எஸ். முதல்வராக இருந்தார். அவர் ஒன்றிய அரசின், பா.ஜ.க.வின் தொங்கு சதையை போலவே செயல்பட்டார். மாநில உரிமைகள் பல பறிக்கப்பட்டது.

அந்த அரசை அகற்ற வேண்டும் என்று நாம் நம்முடைய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினோம். அதன்படியே அந்த இ.பி.எஸ். அரசாங்கத்தை அகற்றிவிட்டு அந்த பெருமிதத்தோடு இன்று நாம் கூடி யிருக்கிறோம். மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் ஆட்சி அமைந்துள்ளது. இந்த ஆட்சி அமைவதற்கு நம்முடைய பங்கும் உள்ளது.

தேர்தல் வெற்றி கொண்டாட முடியாத அளவிற்கு கொரோனா தொற்று

வழங்கியது. வடகிழக்கு பருவமழை டெல்டா மாவட்டங்களில் கடுமையாக பாதித்துள்ளது. முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்த்து ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

நாம் பயிர் காப்பீட்டு திட்டம் 15ம் தேதியுடன் முடிவடைகிறது. அந்தக் காலத்தை மேலும் நீட்டிக்க வேண்டும் என்று கூறி தீர்மானம் நிறைவேற்றினோம்.

நம் தீர்மானம் பத்திரிகைகளில் வருவதற்கு முன்பாக, முதல்வர் அவர்கள் தகவல் அறிந்து, ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதி, கால நீட்டிப்பு பெற்று விட்டார். இது மக்களின் மீது அக்கறையுள்ள அரசாக செயல்படுகிறது. ஒன்றிய அரசு மக்கள் விரோத அரசாக, தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத அரசாக செயல்படுகிறது.

ஒன்றிய அரசு ஆளுநர்களை பயன்படுத்தி பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் போட்டி அரசை நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தியை வலுக்கட்டாயமாக திணிக்கும் முயற்சியை ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. இந்தி திணிப்பிற்கு ஆளுநர் துணை போகிறார். தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு அமல்படுத்த மாட்டோம் என்று கூறுகிறது. தேசிய கல்விக் கொள்கை, சனாதன கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. ஏ.ஐ.டி.யூ.சி. தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தக் கூடாது என்று வலியுறுத்துகிறது.

இந்தியாவில் நால்வர்ணத்தில் ஒரு வருணத்தினர் மட்டும் கல்வி கற்கும் உரிமை என்ற எழுதப்படாத சட்டம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதை எதிர்த்து நாம் போராடி வருகிறோம். இவ்வாறு இரா.முத்தரசன் தனது உரையில் பேசினார்.

# தஞ்சாவூர் லீலாவதி அம்மா மறைவு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தஞ்சாவூர் மாவட்டம், இராயமுண்டான்பட்டி தியாகி என்.வெங்கடாசல் வாழ்விணையர் லீலாவதி அம்மா (85) நவ.28 அன்று காலமானார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையுற்றோம்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தை தஞ்சாவூர் மாவட்டத்தின் கட்டியமைத்த முன்னோடி தியாகி என்.வெங்கடாசலம். இவர் அடித்தட்டு மக்களின் வாழ்வுரிமைக்கு போராடிய நேரத்தில் வர்க்க எதிரிகளால் வெட்டிக் கொல்லப்பட்டவர். கணவரை களப்பலி கொடுத்தவர் லீலாவதி அம்மா. இவர்களது மகன்களான வழக்கறிஞர் வெ.ஜீவக்குமார், டாக்டர் வெ.சுகுமார், என்.வி.கண்ணன் ஆகியோரும் பொதுவாழ்வில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்கை நெறி சார்ந்த குடும்ப வாழ்வு நடத்திய லீலாவதி அம்மா வாழ்வும் தியாகம் நிறைந்தது

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரி வித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# சாதியை மறுப்பவர்கள் உண்டு மறந்தவர்கள் உண்டா?

**தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கி ஊழியர் சம்மேளனத்தி 6 வது மாநில மாநாடு 26, 27 தேதிகளில் கோயமுத்தூர் செல்வபுரம் பேரூர் சாலையில் உள்ள எஸ்.ஜே. கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு மாநாட்டை துவக்கி வைத்து தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. தலைவர் கே. சுப்பராயன் எம்.பி., பேசும்போது, சாதியை மறுப்பவர்கள் உண்டு, மறந்தவர்கள் உண்டா? என்று கேள்வி எழுப்பினார்.**

## கே.சுப்பராயன் எம்.பி., கேள்வி

தொழிலாளி வர்க்க ஒற்றுமையை சிதறடிக்கிற வேலையை, மிக மிக தீவிரமாக, சக்தி மிக்க யுக்திகளோடு கார்ப்பரேட் ஆதரவு சக்திகள் நிறைவேற்றி வருகிறார்கள்.

அவர்கள் கையாளுகிற சக்திமிக்க ஆயுதங்களில் ஒன்று சாதி. சாதி, மதம், இனம் என்ற இன்னபிற அடையாளங்கள். இந்த அடையாளங்களை அடித்து நொறுக்கிவிட்டு தொழிலாளி வர்க்கம் மென்மேலும் ஒன்றுபட வேண்டிய அவசர அவசியம் உள்ள நிலையில், இன்றைய தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு விடாமல் தடுக்க சுரண்டுகிற கும்பல் ஏவி விட்டுள்ள சக்தி மிக்க ஆயுதம் சாதி, இந்த சாதி

தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான மிக நுட்பமான ஆயுதங்களில் உள்நோக்கத்தை, அந்தரங்கத்தை புரிந்து கொண்டு, அதற்கு தக்கபடி போராட்ட யுக்திகளை நாம் வகுக்க வேண்டும்.

அனைத்து துறைகளிலும் பணியாற்றுகிற தொழிலாளி வர்க்கத்தை ஒன்று படுத்துகிற விரிவான பார்வை நமக்கு வேண்டும். ஒற்றுமை இருந்தால் மட்டுமே நிகழ்கால சவால்களை தொழிலாளி வர்க்கம் முறியடிக்க முடியும். அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் வெறும் 7 %சதம் பேர்கள்தான். அமைப்பு சாராத் தொழிலாளர்கள் 92 %சதம் பேர்கள் உள்ளார்கள்.

சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஈ. அருணாச்சலம், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஜி. வைரப்பன், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் சி. எஸ். வேணுகோபால், செயலாளர் எஸ். பி. சீனிவாசன், கோவை மாவட்ட ஏ.ஐ.டி.யூ.சி. கவுன்சில் செயலாளர் சி.தங்கவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பி.ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஏ. சுப்பிரமணியம் அறிக்கை சமர்ப்பித்து பேசினார்.

இதில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்திய தொழிலாளர் வர்க்கம் போராடி பெற்ற பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களை, சீர்திருத்துவதாக கூறி ஒன்றிய அரசு நடைமுறையில் இருந்த 44 தொழிலாளர் நல சட்டங்கள் 4 தொகுப்புகளாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் அனைத்தும் தொழிலாளர்களின் நலங்களுக்கு எதிரானதாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் முதலாளிகளுக்கும் சாதகமாகவும் உள்ளது. தற்போதைய இந்த சட்ட திருத்தங்கள் மூலம் பணியாளர்களை






அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை நாட்டில் வெறும் 7 சதம்தான், அமைப்பு சாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு எத்தகைய சமூக பாதுகாப்பும் இல்லை.

சமூக பாதுகாப்பை ஓர் அளவிற்கு வழங்கிக் கொண்டிருந்த பழைய சட்டங்கள் முழுமையும் தூக்கி எறியப்பட்டு விட்டன. சில்லறை சலுகைகள் கூட இல்லை. பிரதானமாக ஓய்வுக்கு பின்னர் தொழிலாளர்கள் உயிரோடு வாழ குறைந்தபட்ச தேவைகள் கூட நிறைவேற்றப்படுவதில்லை. பென்ஷன் முறை ஒழிக்கப் பட்டு விட்டது.

கூட்டுறவு அர்பன் வங்கி ஊழியர்களுக்கு இந்த பிரச்சனைகள் குறித்து என்ன பார்வை உள்ளது. உலகம் முழுமையும் புது புது பிரச்சனைகள், புதுப்புது வடிவங்களில் வெளிப்பட்டும் வருகிறது. உலக அளவில் பிரம்மாண்டமான இயக்கங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவில் அத்தகைய பெரிய இயக்கங்கள் ஏற்படவில்லை என்ற தைரியத்தில் தான் ஒன்றிய அரசு எல்லாவிதமான தாக்குதல்களையும் தொழிற்சங்க இயக்கங்கள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் தொடுத்து வருகிறார்கள்.

இவற்றிலிருந்து விடிவு பிறக்கவேண்டுமானால் இந்த அரசு தூக்கி எறியப்படவேண்டும். கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளைக் கொண்ட இந்த ஒன்றிய அரசு தூக்கி எறியப் படாத வரை, இந்த அரசு தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

கார்ப்பரேட் முதலாளிகளை காப்பாற்றுவதற்காக செயல்படுகிற இந்த மோடி அரசை முற்றிலும் நீக்காத வரை, எந்த தொழிலாளி வர்க்க கோரிக்கைகளும் நிறைவேறாது.

கொடுமை என்னவென்றால், இதுவரையும் இல்லாத அளவிற்கு நம்மை பிளவு படுத்துகிறது.

**இந்த சாதி நம்மை பலவீனப்படுத்துகிறது. இந்த சாதி நம்மை ஒன்றுபடாமல் தடுக்கிறது. தொழிலாளி வர்க்கம் முழு வலிமையோடு எழுந்து நின்று நிகழ்கால சவால்களை முறியடிக்க இயலாதவாறு பலவீனப்படுத்துகிற பிரதான ஆயுதம் இந்த சாதி மதம். இதிலிருந்து நாம் வெளியேற வேண்டும்.**

நிகழ்காலத்தில் மிகப்பெரிய சவால் இதுதான். நாம் ஒன்றுபட்டால் மட்டுமே உலக அளவிலான ஏகாதிபத்திய தாக்குதல்களை எதிர்கொள்ள முடியும், இந்திய அளவிலான கார்ப்பரேட் ஆதரவு ஒன்றிய அரசின் தாக்குதல்களை எதிர்கொள்ள நமக்கு பிரதான தேவை ஒற்றுமை.

அதுவும் வலிமையான ஒற்றுமை தேவை, சாதியால் ஒற்றுமை சிதைக்கப்படுகிறது. சாதியை மறுப்பவர்கள் உண்டு ஆனால் சாதியை மறந்தவர்கள் உண்டா?, மதம் மாறினாலும் சாதிக் குறியீடு மாறுவதில்லை. சாதிய அடையாளக் குறியீடு மதம் மாறியபின்னரும் கூட ஒரு அவமானகரமான முறையில் வெளிப்படுகிறது.

இன்றைய தேவை, தொழிலாளி வர்க்கத்தின் விரிவான ஒற்றுமை, ஆழமான ஒற்றுமை, அரசியல் தெளிவோடு கூடிய ஒற்றுமை, அரசியல் அற்ற போக்குகள் ஊக்குவிக்கப்படுகிற நிலையில், மக்கள் நலன் பேணுகிற அரசியல் மீது நாம் அக்கறை செலுத்த வேண்டும்.

தொழிலாளி வர்க்க நலன் பேணும் ஒரு புதிய அரசை கொண்டு வருவதற்கு தெளிந்த அரசியல் சிந்தனை வேண்டும். வாழை நாரில் மலர்கள் தொடுக்கப் பட்டு மாலை கட்டப்படுவது போல, வேற்றுமைகள் இருந்தாலும் தொழிலாளி வர்க்க நலன் காப்பாற்றப்பட ஒன்றுபட வேண்டும்.

அமைப்பு சாராத் தொழிலாளர்களை அமைப்பாக திரட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். அவர்களை நாம் திரட்டவில்லை என்றால் அவர்களை நமக்கு எதிராக முதலாளி வர்க்கம் கொம்பு சீவி விடுவார்கள். அவர்கள் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு எதிரான கருவிகளாக பயன்படுத்தப் படுவார்கள்.

வேலையின்மையால் பாதிக்கப்பட்டிருக்கிற அமைப்புசாராத் தொழிலாளர்களை, அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு எதிராக போராட வைப்பார்கள்.

இந்த ஆபத்தை குறைத்து மதிப்பிட முடியாது. பல பத்தாண்டுகளுக்கு முன்னர் வங்கி ஊழியர்கள் போராட்ட களத்தில் நின்ற போது, வேலையில்லாத இளைஞர்களை வங்கி ஊழியர்களுக்கு எதிராக திரட்டி நிறுத்தப் பட்ட அனுபவங்களையும் மறந்துவிட முடியாது.

நம்முடைய கடமை சாதி மத அடையாளங்களைக் கடந்து தொழிலாளி வர்க்கம் என்ற முறையில் வர்க்க ரீதியாக ஒன்று படுத்துவதற்கு உயர் முன்னுரிமை கொடுப்பதும், அதேபோல கோடிக்கணக்கில் சிதறி கிடக்கும் அமைப்பு சாரா தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்துவதும், தொழிலாளி வர்க்க நலன் பேணுகிற அரசியலை போதிப்பதுமாகும். அதற்குரிய வழி வகைகளையும் இந்த மாநாடு சிந்திக்க வேண்டும். இவ்வாறு தனது உரையில் கே.சுப்பராயன் கூறினார்.

இந்த மாநாட்டிற்கு தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் என். மணிராஜ் தலைமை தாங்கினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சி.எச். வெங்கடாசலம், தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கவுன்சில் செயலாளர் எம். ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., தமிழ்நாடு வங்கி ஊழியர்

ஆட் குறைப்பு செய்வது நிர்வாகங்களுக்கு எளிதாக்கப்பட்டுள்ளது.

நிரந்தர பணி என்பது மாறி, குறிப்பிட்ட காலம் வரை தற்காலிக பணி என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்திய தொழிலாளி வர்க்கத்தின் மீது இந்த சட்டத் திருத்தம் மிருகத்தனமான தாக்குதலை தொடுத்து இருக்கிறது. தொழிலாளர் நலனுக்கு எதிராக கொண்டு வந்த இந்த சட்ட திருத்தங்களை ஒன்றிய அரசு திரும்ப பெற வேண்டும்.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆண்டு தோறும் ரூபாய் 1.50 லட்சம் கோடி வரை சலுகைகள் அளித்து வரும் ஒன்றிய அரசு, மக்களுக்கு சேவையாற்றும் கூட்டுறவு அமைப்புகள் தங்களது லாபத்தில் இருந்து 35 % சதவீதம் அளவிற்கு வருமான வரி செலுத்த வற்புறுத்துகிறது. ஒன்றிய அரசின் இச்செயல் மக்கள் நலன்கள், குறிப்பாக விவசாயிகள் நலன்களுக்கு எதிரானதாகும்.

ஒன்றிய அரசு கூட்டுறவு வங்கிகளிடம் இருந்து சில ஆயிரம் கோடிகளை வருமான வரியாக வசூலித்து வருகிறது. எனவே, கூட்டுறவு வங்கிகள் மக்கள் நலங்களுக்கான வங்கிகள் என்பதை ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டு, எதிர்வரும் நிதிநிலை அறிக்கையின் போது வருமானவரிச் சட்டம் 80 (பி) யை விளக்கிக் கொள்ள வேண்டும்.

குறுகிய காலக் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகளில் தற்போதுள்ள மூன்று அடுக்கு முறையை, இரண்டு அடுக்கு முறையாக மாற்றி அமைத்திட வேண்டும். வங்கியியல் ஒழுங்குமுறை சட்டம் திருத்தம் 2020 பிரிவு 12 உட்பிரிவு 1 விளக்கிக் கொள்ளப்பட வேண்டும். பணி நிரந்தரப்படுத்தப்படாத பணியாளர்களுக்கு பதவி உயர்வு உள்ளிட்ட சலுகைகளை வழங்க சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட பதிவாளர் உத்தரவினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 21 தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.



முனைவர் தி.ராஜ் பிரவின்

# நெல் சாகுபடியில் தேவைப்படும் புதிய கொள்முதல் விலையும் கொள்கை மாற்றங்களும்

**கடந்த சில ஆண்டுகளாக நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், பருவமாற்று பிரச்சினைகள் மற்றும் வேளாண் விளைபொருட்கள் விலை ஏற்ற இறக்கங்களால் கடுமையான பொருளாதார மற்றும் உற்பத்தி இழப்புகளை சந்தித்து வருகின்றனர்.**

தேசிய அளவில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலவாழ்வுத் துறையின் புள்ளி விபரங்களை பார்க்கும் போது நமது தேசத்தின் நெல் சாகுபடி பரப்பளவு 13%. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு பருவ மழையை பொறுத்த வரை அதிகளவு மழை காணப்பட்டாலும் மத்திய இந்திய மாநிலங்களில் அதிகப்படியாக பெய்த மழை காரணமாக நெல், பயறு வகைப் பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது.

தற்போது 963.99 லட்சம் ஹெக்டர்கள் என்ற அளவில் அனைத்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடைமுறை சூழலில் கடந்த ஆண்டு சாகுபடி பரப்பளவை (10001.61 லட்சம் ஹெக்டர்) விட இது மிகவும் குறைவு. குறிப்பாக நெல் சாகுபடி செய்யப்படும் மேற்கு வங்காளம் (21%), பீகார் (38%), ஜார்க்கண்ட் (41%) உத்திரப்பிரதேசத்தில் (44%) ஆகிய மாநிலங்களில் மழையின் அளவு குறைந்ததால் நெல், பயிர், பருத்தி மற்றும் பிற தானியங்கள் சாகுபடி பரப்பளவு மிகவும் குறைய காரணம்.

மறுபுறம் மத்திய நீர் ஆணையம் (Central Water Commission) புள்ளி விபரங்களை பார்க்கும் போது பல மாநிலங்களில் பாசன மற்றும் குடிநீர் அளவு சராசரி அளவைக் காட்டிலும் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. குறிப்பாக ஜார்கண்ட் மாநிலத்தில் 49% குறைவாகவும், மேற்கு வங்காளத்தில் 47% குறைவாகவும், பீகாரில் 51% குறைவாகவும் உத்திரப்பிரதேசத்தில் 30% குறைவாகவும் காணப்பட்டது. இந்தச் சூழலும் விவசாயிகள் சாகுபடி பரப்பளவை வெகுவாக குறைக்க காரணம். நெல் சாகுபடி மட்டுமல்லாமல் பயறுவகைப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் போன்றவை சாகுபடியும் கடந்த ஆண்டை விட புள்ளி விபரங்களைக் கொண்டு பார்க்கும் போது குறைந்தே காணப்படுகிறது.

பயிர் சாகுபடி புள்ளி விபரங்கள்

| பயிர்கள் | 2021 | 2022 | பரப்பளவு இடைவெளி (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| நெல் | 353.62 | 309.79 | 13 % |
| பயறு வகைப் பயிர்கள் | 127.22 | 121.11 | 4.02 % |
| எண்ணெய் வித்துக்கள் | 181.83 | 180.43 | 0.77 % |

தகவல்: மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சகம்

மேற்கண்ட சாகுபடி பரப்பளவு புள்ளி விபரங்கள் வானிலை சூழல் காரணமாகவும், தண்ணீர்ப் பற்றாக்குறை சூழல் காரணமாகவும் குறைந்த சாகுபடி பரப்பளவை நமக்கு காட்டுகிறது. இத்தகைய தேச சூழலுக்கு மாற்றாக தமிழகம் நெல் சாகுபடி பரப்பளவு மற்றும் மொத்த சாகுபடி இந்த ஆண்டு வெகுவாக உயர்ந்து காணப்படுகிறது.

### நெல் சாகுபடியில் தமிழகம் புதிய சாதனை:

தமிழகத்தில் தேசிய அளவிலான பருவமாற்று பிரச்சினைகள், வேளாண் விளைபொருட்கள் சந்தைகளில் விலை ஏற்ற இறக்கங்கள் போன்றவை காணப்பட்டாலும், இந்த ஆண்டு கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின் தமிழகம் நெல் சாகுபடியில் ஒரு வரலாற்று சாதனையை செய்து காட்டியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக டெல்டா மாவட்டங்களில் குறிப்பாக காவிரி பாசன பகுதிகளில் பெய்த போதுமான மழை காரணமாக விவசாயிகள் அதிகப்படியான சம்பா, குறுவையில் நெல் சாகுபடியில் தீவிரம் காட்டினர். இது ஒருபுறம் இருக்க தமிழக அரசின் பல்வேறு வேளாண் சார்ந்த நலத்திட்டங்கள், வேளாண் கடன் மற்றும் காப்பீடு வசதிகள், இடுபொருட்கள் உரிய நேரத்தில் போதிய அளவில் கிடைத்தது போன்றவை காரணமாக தமிழகத்தின் சாகுபடி பரப்பளவு ஆண்டுதோறும் வெகுவாக உயர்ந்து வருகிறது.

கடந்த ஆண்டு 1.11 லட்சம் டன்களாக இருந்த நெல் உற்பத்தி இந்த ஆண்டு மேலும் உயர்ந்து 1.22 லட்சம் டன்கள் என்ற அளவில் காணப்படுகிறது. வேளாண் துறைக்கு என்று தனி நிதி நிலை அறிக்கை, குறித்த காலத்தில் பாசன நீர் திறந்து விடப்பட்டதும், அவை கொள்கை முடிவுகளும்:

தற்போது தமிழகம் தேசிய அளவில் நெல் சாகுபடியில் ஒரு சாதனையை அடைந்து விட்டது அல்லது தொட்டு விட்டது. இந்த சாதனை மேலும் தொடரவும் பல புதிய சாதனைகளை நெல் சாகுபடியில் பெற தற்போதைய நெல் கொள்முதல் விலையில் மாற்றம் செய்ய வேண்டியது முக்கிய தேவையாகும். தற்போது தமிழ்நாட்டில் நெல் கொள்முதலுக்கு கூடுதல் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதற்குப் பிறகும் சாதாரண ரகத்திற்கு ரூ.2115ம் சன்னரகத்திற்கு ரூ.2160 என்ற அளவில் அரசு கொள்முதல் நிலையங்களில் பெறப்படுகிறது. தற்போது செப்டம்பர் 1 முதல் கொள்முதல் செய்யப்படும் நெல் கொள்முதலுக்கு தமிழக அரசின் ஊக்கத்தொகையாக சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.75ம், சன்னரகத்திக்கு ரூ. 100 வழங்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நெல் கொள்முதல் விலை உயர்வு என்பது விதை, உரம், பூச்சி மருந்து களைக்கொல்லி, டீசல் விலைகளை கருத்தில் கொள்ளும்போது மிகவும் குறைவு. ஒரு கிலோ நெல்லுக்கு ரூ. 1 என்ற அளவில் கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் உயர்ந்து வரும் நெல் உற்பத்தி செலவுகளை கருத்தில் கொள்ளும்போது மத்திய மற்றும் மாநில அரசுகள் அறிவித்துள்ள நெல் கொள்முதல் விலை மிகவும் குறைவு.

மாறாக நமக்கு அருகில் உள்ள கேரளா மாநில அரசு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2820 என்ற அளவில் நெல் கொள்முதலை செய்து வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக விவசாயிகள். விவசாய சங்கங்கள் கோரி வரும் எம். எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரை அடிப்படையில் 50 சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டால் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2707 அளவிற்கு வழங்க வேண்டும்.

இதனை கருத்தில் கொள்ளும்போது கேரளா மாநில அரசு எம். எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரையை விட அதிக விலை கொடுத்து நெல் கொள்முதல் செய்து நமது மாநிலத்திற்கும் நெல் சாகுபடி செய்யும் பிற மாநிலங்கள் மட்டுமல்லாமல் நமது தேசத்திற்கே சிறந்த வழிகாட்டியாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

மறுபுறம் தமிழத்தின் மொத்த அரிசி உற்பத்தியில் 34% அளிக்கின்ற காவிரி பாசன பகுதிகள் போன்றவை நெல் சாகுபடியை மட்டுமே நம்பியுள்ளன. இந்தச் சூழலில் குறைந்தளவு நெல் கொள்முதல் விலை காரணமாகவும் வேறு பயிர்கள் இங்கு சாகுபடி செய்ய முடியாத நடைமுறை சூழல் காரணமாக தமிழ்நாடு மனித வள மேம்பாட்டு அறிக்கையில் பின்தங்கி உள்ளது.

2017ம் ஆண்டின் படி தனிநபர் வருமானத்தில் தஞ்சாவூர் 23வது இடத்திலும், திருவாரூர் 27வது இடத்திலும் நாகை மாவட்டம் 30வது இடத்திலும் உள்ளது. இந்த நிலையை மாற்ற வேண்டும். இதற்கு தமிழக அரசு விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், பண்ணை மகளிரின் பெருவாரியான ஆதரவில் ஆட்சி பொறுப்புக்கு வந்துள்ள சூழலில் அவர்களின் நலன்களை பாதுகாக்கவும் தேர்தல் அறிக்கையில் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு குறைந்தது ரூ. 2500 வழங்க வேண்டும் என்பது நமது தமிழக விவசாயிகளின் எதிர்பார்ப்பு.



கடைமடை வரை செல்ல வாய்க்கால்கள் உரிய முறையில் தூர் வாரப்பட்டதே இந்த புதிய வேளாண் சாதனைகளுக்கு காரணம்.

தற்போது நமது பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடிக்கும், தமிழக அரசின் வேளாண் துறை முக்கியத்துவம் வழங்கி வருகிறது. தற்போது பருவமாற்று பிரச்சினைகளை தாங்கி வரும் தன்மை கொண்ட பல நாட்டுப்புற ரகங்கள் (Folk varieties) அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. இயற்கையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த பாரம்பரிய ரகங்கள் வாயிலாக ஒரு புதிய இயற்கை சார்ந்த விளைபொருட்களை உற்பத்தி செய்து வருகிறோம். இது நமது மாநில மற்றும் தேச மக்களுக்கு வழங்கும் போது பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை தரும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழகத்தில் நெல் சாகுபடி சாதனைகள் தொடர தேவைப்படும் புதிய வேளாண் கொள்முதல் விலையும்

இவ்வாறு நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்து வழங்கும் போது தற்போது தமிழகம் நெல் சாகுபடியில் செய்துள்ள சாதனைகள் தொடர்வதுடன், நெல் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் பகுதிகளில் தனிநபர் வருமானத்தை கணிசமாக உயர்த்த முடியும். இதன் வாயிலாக மேலும் நம்மால் நமது நெல் சாகுபடி பரப்பளவை வெகுவாக பெருகி உயர்ந்து வரும் நமது மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் தேவைக்கேற்ப நெல் உற்பத்தியை பெருக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்புக்கு: 9486385423

## ஆகாஷ் பெருமாள்சாமிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு



36வது தேசிய விளையாட்டு போட்டி குஜராத்தில் உள்ள ஆமதாபாத், ராஜ்கோட், சூரத் உள்பட 6 நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் டிரையத்லான் (நீச்சல், ஓட்டம், சைக்கிளிங் ஆகிய 3 பந்தயங்கள் அடங்கிய போட்டி) கலப்பு தொடர் பிரிவில் ஆகாஷ் பெருமாள்சாமி, வாமன், ஆர்த்தி, கீர்த்தி ஆகியோர் அடங்கிய தமிழக அணி 1 மணி 59 நிமிடங்களில் இலக்கை கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றது. குஜராத் வெள்ளிப்பதக்கமும், மணிப்பூர் வெண்கலப்பதக்கமும் பெற்றது.

ஆகாஷ் பெருமாள்சாமி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரு.வி.க. நகர் செயலாளர் பெருமாள்சாமியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார்.

மென்மேலும் வளர இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# அம்பேத்கரை துடிக்கும் ஆ



- த.லெனின்

**பொதுவாக ஆர்.எஸ்.எஸ்.அமைப்பும், சங்கப் பரிவாரங்களும் தொடர்ந்து நமது தேசியத் தலைவர்களை, ஆன்மிக ஞானிகளை, சமூகப் புரட்சியாளர்களை, உட்கிரகித்து அவர்களது கருத்தை திருத்தி ஏதோ தாங்கள் அவர்கள் வழியில் நிற்பது போன்ற, ஒரு மாய பிம்பத்தை உருவாக்க முயற்சித்து வருகின்றனர்.**

மகாபாரதத்தில் திருதுராஷ்டிர ஆலிங்கனம் என்பதைப் போல அவர்கள் அதை உருமாற்றி வருகிறார்கள். அந்த வகையில் தான் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரல், அறிவின் சுடர், கல்வியாளர், பொருளாதார நிபுணர், தத்துவவாதி, வரலாற்றாளர், அரசியல் அறிஞர், தொழில், நீர்ப்பாசனம், நதிநீர் இணைப்பு குறித்து பேசியவர், வயது வந்தோருக்கு வாக்குரிமை, தொழிலாளர்களுக்கான பென்ஷன் உள்ளிட்ட சமூக நல திட்டங்கள், பொதுத்துறை உருவாக்கம் என பல வகைகளிலும் முத்திரை பதித்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரை தங்களின் வகுப்புவாத நோக்கத்திற்கு ஏற்ப, பயன்படுத்த பல கதைகளைப் புனைந்து இப்போது பரப்பியும் வருகின்றனர்.

அரசமைப்புச் சட்டத்தில் மதச்சார்பின்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றை முகப்புரையில் அம்பேத்கர் ஏற்க மறுத்தார் என்றும், சமஸ்கிருதத்தை அவர் தேசிய மொழியாக ஆக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும், பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த அவர் ஆதரவளித்தார் என்றும், இட ஒதுக்கீட்டை பத்தாண்டுகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று அவர் கூறியதாகவும், பண மதிப்பிழப்பு நடவடிக்கையை அவர் ஒவ்வொரு பத்தாண்டும் நடத்த வேண்டும் என்று கூறியதாகவும், ஆர். எஸ்.எஸ். முகாமுக்கு சென்று அவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை பாராட்டியதாகவும், அத்துடன் அவர் இஸ்லாமுக்கு எதிராக செயல்பட்டதாகவும், ஆரியர்களை அம்பேத்கர் வந்தேறிகள் இல்லை என்று குறிப்பிட்டதாகவும், பொதுசிவில் சட்டத்தை அவர் ஆதரித்ததாகவும், கம்யூனிஸ்ட்களுக்கு என்றும் எதிராக அவர் இருந்ததாகவும் தொடர்ந்து இப்பொய் கருத்துக்களை பரப்பி வருகின்றனர்.

இந்தியாவின் வரலாற்று பெட்டகமான பாபர் மசூதியை அவர்கள் திட்டமிட்டு 1992ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் தேதியை அவர்கள் தேர்ந்தெடுத்ததற்கு காரணமே அம்பேத்கரின் நினைவு தினத்தில் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து சமூக மாறுதலுக்காக, சாதி ஒழிப்பிற்காக, உறுதியெடுக்கும் நாளாக அது அமைந்துவிட்டதே என்று அவர்கள் மனப்புழுக்கம் அடைந்து, அதை மாற்றி அமைக்கும் விதத்தில்தான், அதே நாளை ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், சங்க பரிவாரங்களும் தேர்ந்தெடுத்து பாபர் மசூதியை தகர்த்து எறிந்தனர்.

வாஜ்பாய் காலத்தில் ஒன்றிய அமைச்சராக இருந்த அருண் ஷோரி ''தவறாக வழிபடும் கடவுளர்கள்'' (Worshiping of False Gods) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதில் டாக்டர் அம்பேத்கர் ஒன்றும் நமது அரசமைப்புச் சட்டத்தை தனியாளாக நின்று உருவாக்கவில்லை என்றும், அவர் எப்போதும் பிரிட்டிஷாரின் ஆதரவாளர் என்றும் குறிப்பிட்டதுடன், மிக முக்கியமான ஒன்று இவர்தான் சமூக நீதிக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டவர் ஆவர். இவர் தான் வரலாற்றில் பங்கு விலகல்துறை அமைச்சர் என்ற பொறுப்பை வகித்தவர். இதன் மூலம் பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு விற்று தன் ஆசைகளை தீர்த்துக் கொண்டவரும் சமூகநீதியை, இடஒதுக்கீட்டை குழிதோண்டி புதைத்தவரும் இவரே.

அரசியல் நிர்ணய சபை விவாதங்களின் போது, சோசலிசம் மற்றும் மதச்சார்பின்மை என்ற வார்த்தைகள் இடம் பெற வேண்டும் என்று தொடர்ந்து விவாதிக்கப்பட்டபோது அதில் தலையிட்டு பேசிய அம்பேத்கர் நமது அரசமைப்புச் சட்டம் முழுவதும் சோசலிசம் மற்றும் சமயச் சார்பின்மை என்பதைத்தான் தொடர்ந்து வலியுறுத்துகிறது என்று குறிப்பிட்டதுடன் இவற்றை தனியாக முகப்புரையில் காட்டித்தான் அதனை அமல்படுத்த வேண்டும் என்பதற்கில்லை என்ற தனது பதிலையும் பதிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வழியில்தான் நெருக்கடி காலத்தின் போது கொண்டு வரப்பட்ட இந்த சட்டத்தை உச்சநீதிமன்றம் ஏற்று அது அரசமைப்பு சட்டத்தின் பிரிக்க முடியாத பகுதி என்று தீர்ப்பு வழங்கியது.

சமஸ்கிருதம்தான் இந்தியாவின் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று அவர் கூறியதாக கூறுவது வடிகட்டிய பொய். காரணம், தனது பள்ளிக் காலத்தில் அவரும், அவரது அண்ணனும் இரண்டாவது மொழியாக சமஸ்கிருதத்தை தான் படிக்க வேண்டும் என்று விரும்பி இருந்தனர். ஆனால் சூத்திரர்கள் மற்றும் தீண்டத்தகாதவர்கள் சமஸ்கிருதத்தை படிக்கக் கூடாது அல்லது மற்றவர் படிப்பதைக் கூட காதில் கேட்கவும் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்த காரணத்தால், அவருடைய ஆசிரியர்கள் இதனை கற்பிக்க மறுத்தனர். எனவே, தனது விருப்பத்துக்கு மாறாக, பெர்சியன் மொழியை எடுத்துப் படித்தார். அதுதான் உண்மை.

இருந்தும், பின்னர் தனது சொந்த முயற்சியால், பண்டிதர்களின் துணைக் கொண்டு, சமஸ்கிருதத்தை கற்று புலமையும் பெற்றார். அவர் சமஸ்கிருதத்தை புகழ்ந்து பேசியது என்பது பெர்சியன் மொழி சமஸ்கிருதத்துக்கு ஈடாகாது என்ற நோக்கிலே ஆகும்.

**<u>ஆனால், ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியா முழுவதும் நாகர்களின் மொழியான தமிழே பரவியிருந்தது என்பதையும், அவர் தன் ஆய்வு வழியில் சுட்டிக்காட்டியதை எவரும் புறம் தள்ள முடியாது.</u>**

அம்பேத்கர் இட ஒதுக்கீட்டைப் பத்தாண்டுகளுக்கு மேல் நீட்டிக்க கூடாது என்று குறிப்பிட்டதாக ஒரு தொடர் பொய்யை பரப்பி வருகின்றனர். பொதுவாக இட ஒதுக்கீடு மூன்று வகைப்படும்.

1. **அரசியல் இட ஒதுக்கீடு. அதாவது, தனித் தொகுதிகள்.**
2. **கல்வியில் இட ஒதுக்கீடு,**
3. **வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு என்பதே ஆகும்.**

அரசமைப்புச் சட்டம் 334ன் படி, அரசியல் இட ஒதுக்கீடுக்கு மட்டும்தான் பத்தாண்டு வரம்பு உள்ளது. ஏனையவற்றுக்கு எந்த வரம்பும் இல்லை. அதுவும் அரசியல் சாசன 8வது பகுதியின் படி அரசியல் இட ஒதுக்கீட்டில் பத்தாண்டுகள் என்ற வரம்பு என்பதை அம்பேத்கர் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், தீவிர ஜனநாயகவாதியான அவர் மற்றவர் கருத்திற்கு மதிப்பளித்து ஒத்துக் கொண்டார் என்றுதான் பார்க்க வேண்டும்.

1949 ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று நாகப்பா என்ற ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த தலித் தலைவர் இந்த அரசியல் இட ஒதுக்கீட்டை 150 ஆண்டு காலம் வரை நீட்டிக்கலாம் என்று குறிப்பிட்டபோது, அவருக்கு பதில் அளிக்கும் விதத்தில், தனிப்பட்ட முறையில், அம்பேத்கர் இட ஒதுக்கீடு நீண்ட காலம் வரை தேவை, கால வரம்பை அதற்கேற்ப நீட்டித்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருந்தும், அம்பேத்கர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக இருந்தார் என்றும், பட்டியல் வெளியேற்றம் கூட அவரது சிந்தனை தான் என்று இன்று திரித்து பேசப்படுகிறது.

அம்பேத்கர் இந்து மதத்தை எதிர்த்தவர் இல்லை. அதனால்தான் அவர் மதமாற முடிவெடுத்தபோது இந்திய மதமான பௌத்தத்திற்கு மாறினார் என்ற ஒரு கட்டுக்கதையை சங்கப் பரிவார போலி செய்தி உருவாக்கும் தொழிற்சாலையான ஐ.டி.செல்களில் உருவாக்கப்பட்டது பரப்புரை நிகழ்த்தப்படுகிறது.

ஆனால் உண்மை என்ன? இதோ பாருங்கள். இந்து மதம் தான் சாதி என்ற கருத்தை ஊட்டி வளர்கிறது. ஆகவே, உண்மையான எதிரி சாஸ்திரங்களே ஆகும். ஏனெனில், சாஸ்திரங்கள் தான் சாதி வழிபட்ட மதத்தை கற்பிக்கின்றன. சாஸ்திரங்களும், இதிகாச புராணங்களும் மேலானவை என்ற நம்பிக்கையை பொசுக்குங்கள். சாஸ்திரங்கள் மற்றும் அதிகாரத்தை, புனிதத்தை, தெய்வத் தன்மையை அழித்திடுங்கள். சாஸ்திரங்கள் என்ற அடிமைச்சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் விடுதலை கொடுங்கள்!

அதன் பிறகு அவர்கள், நீங்கள் யாரும் சொல்லாமலேயே, கலப்புத் திருமணம் செய்து கொள்வார்கள் என்றும் முழங்கினார். சாதி என்பது மனுவுக்கு முன்பே இருந்தது. ஆனால், மடத் துணிச்சல் மிக்க, வெட்கங் கெட்ட மனு இவற்றைத் தொகுத்து விதிகளாக எழுதினார். அப்போது நடைமுறையில் இருந்து சாதி சட்ட விதிகள் ஆனது என்று ''இந்தியாவில் சாதிகள்'' என்ற தனது புகழ் பெற்ற கட்டுரையில் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

உலகில் உள்ள எல்லா மதங்களும், இறைவன் மனிதனைப் படைத்தான் என்று குறிப்பிடுகிறது. ஆனால், இந்து மதம் மட்டும் தான், முகத்திலிருந்து ஒருவனையும், புஜத்திலிருந்து ஒருவனையும், தொடையிலிருந்து ஒருவனையும், பாதங்களில் இருந்து ஒருவனையும் படைத்ததாக குறிப்பிடுகிறது என்று இடிந்துரை வழங்கினார்.

இந்து பெண்கள் உரிமைக்காக 1947 ஆம் ஆண்டு இந்து சட்டத் திருத்த மசோதா ஒன்றை அவர் சட்ட அமைச்சராக இருந்தபோது நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார். அச்சட்டத்தில் அன்று வரை நடப்பில் இருந்த இந்து மத பழக்க வழக்க சட்டங்கள், இனிமேற்கொண்டு செல்லாது என்ற வருண ஒழிப்பு கொள்கையையும், அது அடக்கி இருந்தது.

இச்சட்டத்தைதான் அன்றைக்கு சனாதனிகளும், காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே இருந்த பிற்போக்காளர்களும் எதிர்த்து நின்றார்கள். இதன் காரணமாகத்தான் தனது சட்ட அமைச்சர் பொறுப்பில் இருந்து 1951 ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் ராஜினாமா செய்தார் என்ற வரலாற்றை எப்படி மூடி மறைக்க முடியும்?





**<u>''நான் இந்துவாகப் பிறந்து விட்டேன். ஏனெனில் பிறப்பது என் கையில் இல்லை. ஆனால், இறக்கும்போது நான் இந்துவாக இருக்க மாட்டேன்'' என்று உறுதிப்படக் கூறி அவர் பௌத்த மதத்தை தழுவினார்.</u>**

டாக்டர் அம்பேத்கர் பௌத்த மதத்தை தழுவ வேண்டும் என்று முடிவெடுத்தது 1956 அக்டோபர் 14ஆம் தேதி நாக்பூரில் பல லட்சம் மக்களோடு பௌத்த மதத்தில் இணைந்தார்.

நவயான பௌத்தம் என்று சொல்லக்கூடிய ஒரு புது பிரிவு அது. இப் பிரிவில் கர்மா, மறுபிறவி, தியானம் போன்ற இந்து மத கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டது என்பதே உண்மை. அத்துடன் அவர் அங்கு குழுமியிருந்த மக்களுக்கு 22 உறுதிமொழிகளை பின்பற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை கடவுளாக மதிக்க மாட்டேன்; வணங்க மாட்டேன். ராமனையோ, கிருஷ்ணனையோ கடவுளாக மதிக்க மாட்டேன்; வணங்க மாட்டேன். இந்து மதத்தில் உள்ள கடவுள்களான கௌரி அல்லது கணபதி அல்லது எந்தக் கடவுளையும் வணங்க மாட்டேன். கடவுள் அவதாரம் எதையும் நான் தொழமாட்டேன்.

புத்தர், மகாவிஷ்ணுவின் அவதாரம் என்ற பிரச்சாரத்தை ஒப்புக் கொள்ள

மாட்டேன். சிராா்த்தம், பிண்டம் போடுவது போன்ற சடங்குகளை நான் ஏற்க மாட்டேன். பிராமணர்களால் செய்யப்படும் எந்தச் சடங்கிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டேன்.

எல்லா மனிதர்களும் சமமே. சமத்துவத்திற்காக தொடர்ந்து பாடுபடுவேன். புத்தர் சொன்ன எல்லா வழிமுறைகளையும் ஏற்பேன். மனித இனத்தின் முன்னேற்றத்தை தடுத்தும், அந்த மனிதப்பிறவிகளை இழிவானவர்களாகவும், சம உரிமை அற்றவர்களாகவும் எண்ணி ஒடுக்குவது இந்து மதமே. அத்தகைய இந்து மதத்தை நான் துறக்கிறேன் என்ற உறுதிமொழிகளை டாக்டர் அம்பேத்கர் முழங்க, பல லட்சம் மக்கள் அதனை திரும்பச் சொல்லி ஏற்க, புத்த மதத்தை ஏற்றார் என்பதுதான் உண்மை வரலாறு.

பொது சிவில் சட்டத்தை அம்பேத்கர் ஆதரித்தார்என்றுதொடர்ந்துபாஜகவினரும்,

1950 ஆம் ஆண்டு ஹைதராபாத் முற்போக்காளர் குழுவின் சார்பில், நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்து பேசிய அம்பேத்கர், சாதி, மதம் பாராமல், அனைத்து வகுப்பினருக்கும் பொருந்தக்கூடிய பொதுவான சிவில் சட்டம் இயற்றுவது சுலபமல்ல. இந்தியாவிற்கு அப்பால் உள்ள சில நாடுகளில் இருந்து நீதித்துறை கொள்கைகளை நாம் புதிதாக இறக்குமதி செய்ய முடியாது என்பது தெள்ளத் தெளிவு.

நமது சட்டத்துறை இந்து சமயச் சட்டம், இஸ்லாமிய சமயச்சட்டம், கிறித்தவர்களும், பிற வகுப்பினரும் கடைபிடிக்கும் சட்டங்கள் ஆகியவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு, அவற்றிலிருந்து ஒரு பொதுச் சட்டத்தை உருவாக்க வேண்டும். சட்டம் ஒரே சீராக அனைவருக்கும் பொருந்த வேண்டும் என்பதை ஏற்றுக்

# அபகரிக்க ர்.எஸ்.எஸ்.!

ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரும் எழுதியும், பேசியும் வருகிறார்கள். ஆனால், 1948 நவம்பர் 23ஆம் தேதி அன்று அரசியல் நிர்ணய சபையில் மிகத் தெளிவாக ஒரு பெரும் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில் பேசிய சட்ட அமைச்சர் அம்பேத்கர், குடிமக்கள் அனைவருக்கும் ஒரே சீரான உரிமையியல் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இருப்பதாலேயே அந்தச் சட்டம் கட்டமைக்கப்பட்ட பிறகு குடிமக்கள் என்பதற்காகவே எல்லா குடிமக்கள் மீதும் செயல்படுத்திட முடியாது.

இந்தச் சட்டத்தை தன்னிச்சையாக ஏற்றுக் கொண்டு, தானாக முன்வரும் மக்களுக்கு மட்டும் பொருந்தும் வகையில் எதிர்காலத்தில் நாடாளுமன்றம் வழிவகை செய்ய வேண்டும். இது ஒரு பரிசோதனை முயற்சி அல்ல. 1937 ஆம் ஆண்டு வடமேற்குப் பகுதி பாகிஸ்தானைத் தவிர பிற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட போது, எங்கள் வழி வரும் வாரிசுகளும், சட்டத்திற்கு உட்பட விரும்புகிறோம் என அரசு அதிகாரிகளிடம் அறிவிப்பு செய்து கொள்ளும் பட்சத்தில், அவர்களுக்கு அந்தச் சட்டம் பொருந்தும் என்ற நிலை இருந்ததைப் போல, நாடாளுமன்றம் அப்படி ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்கு இஸ்லாமியர்களும் அச்சப்படத் தேவையில்லை என்றும் கூறினார். ஆனால் பாஜக இந்தக் கோணத்தில் ஒரு முறை கூட பேசியது இல்லை என்பதே உண்மை.

கொள்ளும்படி ஒவ்வொரு உறுப்பினரிடம் நாம் எடுத்துக் கூற வேண்டும்.

முதலில் நம்முடைய சட்டம் எப்படிப்பட்டது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் இந்துச் சட்டம் ஒரு அடர்ந்த காடு போன்றது. இதனை முதலில் ஒழுங்குபடுத்த வேண்டும். பொதுச் சட்டம் பற்றி பேசுவதற்கு முன்னால், தம்மை ஆட்சி செய்கின்றவர் யார்? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று பேசினார்.

ஆனால் இதற்கு நேர் எதிராக இன்று பரப்புரைகள் மேற்கொள்ளப்படுவதும், சிறுபான்மையினரை குறிப்பாக இஸ்லாமியர்களை அச்ச உணர்வுக்கு ஆளாக்குவதும் அவர்களது வகுப்புவாத அரசியல் அல்லாமல் வேறு என்ன?

புரட்சியாளர் அம்பேத்கர் ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் இல்லை என்று கூறியதாக ஒரு பிம்பத்தை சங்கப் பரிவாரங்கள் தொடர்ந்து கூறிவருகின்றனர். ஆனால், சூத்திரர்கள் யார்? என்ற நூலில் ஆரியர்கள் வந்தேறிகள் இல்லை என்று வேதம் சொல்வதாக பதிவு செய்திருக்கிறார் என்றாலும், தீண்டத்தகாதவர்கள் யார்? எனும் கட்டுரையில் ஆரியர்கள் வருவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் தமிழ் தான் பொது மொழியாக இருந்தது என்று குறிப்பிடுவதன் மூலம், ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

கம்யூனிஸ்ட்கள் மீது அம்பேத்கருக்கு பல விஷயங்களில் விமர்சனம் இருந்தது. ஆனால், தனது இறுதி காலத்தில் கம்யூனிஸ்ட்களோடும், காரல் மார்க்ஸோடும் நெருங்கி வந்ததை காணத் தவறக் கூடாது. மகாராஷ்டிராவில் செயல்பட்டு வந்த தொழிற்சங்க தலைவர்களோடும், கம்யூனிஸ்ட்களோடும் மிகச் சிறந்த உறவை பேணினார்.

இங்கிலாந்தில் இருந்து இந்தியா வந்து புரட்சிகர நடவடிக்கையின் மூலம் இந்தியா விடுதலைப் பெற வேண்டும் என்று விரும்பிய இங்கிலாந்துக்காரரான கம்யூனிஸ்ட் பிலிப் ஸ்பிராட் 1927 இல் எழுதி வெளியிட்ட இந்தியாவும், சீனாவும் என்ற துண்டறிக்கைக்காக தேசத்துரோக வழக்கு தொடரப்பட்டு அவர் மீது மிகப்பெரும் தாக்குதலை அரசு மேற்கொண்டது.

இவர் விடுதலைக்காக இளம் வழக்கறிஞரான அம்பேத்கர் வழக்கு நடத்தி வெற்றியும் பெற்றார். இவர்கள் கம்யூனிஸ்டுகளை, கம்யூனிசத்தை வெளிநாட்டு சரக்கு என்பார்கள். ஆனால், வெளிநாட்டுக்காரர்களும், கம்யூனிஸ்ட்களாக இருந்த காரணத்தால், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று மக்களைத் திரட்ட எத்தகைய தியாகங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதிலிருந்து உண்மை புலப்படும்.

பொதுவாக ஆர்.எஸ்.எஸ். எப்போதுமே பெரும் தேசத் தலைவர்களை தங்களுக்கு ஏதுவாக பயன்படுத்தி, தங்களின் முகாம்களுக்கு அழைத்து தங்களைப் பற்றி பாராட்டுரை வழங்க வைத்து வெளியிடுவது வழக்கம். அப்படித்தான் தேசப்பிதா காந்தியை வார்தா முகாமுக்கு அழைத்து இறுதியில் அவரிடம் ஆர்.எஸ்.எஸ். குறித்து என்ன கருதுகிறீர்கள்? என்று கேட்டார்கள்.

அவரோ இந்த அமைப்பை பார்க்கிறபோது இப்படித்தான் ஜொ்மனியில், நாஜிக்களும் இருந்தார்கள் என்பது எனது நினைவுக்கு வருகிறது என்று மறுமொழி அளித்தார். ஆனாலும், அதை மறைத்து காந்தி ஆர்.எஸ்.எஸ். அமைப்பை புகழ்ந்ததாக நீண்ட காலம் பொய் செய்தி பரப்பி வந்தார்கள்.

அதுபோலவே இன்று அறிஞர் அம்பேத்கரும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பை ஆதரித்தார். கோல்வால்கரோடு தொடர்பில் இருந்தார் என்றெல்லாம் சொல்கிறார்கள். உண்மை என்னவெனில் அவர் எல்லோரோடும்பேசியிருக்கலாம், அதுவேறு. அவருடைய செயல்பாடுகள், பேச்சுக்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களின் அடிப்படையில் எந்த இடத்திலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை ஆதரித்து அவர் பேசியதாக இல்லை. ஆனால், தொகுதி 15ல் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அகாலி தளம் ஆகியவை ஆபத்தான அமைப்பு என்று அம்பேத்கர் கூறியிருக்கிறார் என்பதே உண்மை.

மோடி அரசின் நாணய மதிப்பிழப்பு திட்டம் அம்பேத்கரின் திட்டம் என்பதைப் போல ஒரு பொய்யை பரப்பி வருகின்றனர். ஆனால் நாணயம் நடப்பின் சிக்கலை தீர்த்திட முயன்ற போது அன்று ரூபாய்க்கும், பவுண்டுக்கும் இடையே உள்ள மதிப்பு ஆங்கிலேயருக்கு அதிக லாபம் தரும் தன்மையில், சூழ்ச்சியாக கையாளப்பட்டு இருக்கிறது என்பதை புலப்படுத்தி, அதே நேரத்தில் இந்திய மக்களை நசுக்கிடும் வகையில் இடையூறுகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பதை ரூபாயின் சிக்கல் என்ற நூலில் அம்பேத்கர் விளக்கியுள்ளார்.

ஆனால், ஒரு டாலருக்கு ரூ.62 ரூபாய் என்று இருந்த நிலைமை மாறி இன்று மோடியின் ஆட்சியில் ரூ.83 ஆனதற்கு என்ன காரணம்? ஏகாதிபத்திய சூழ்ச்சி என்பது தானே! அம்பேத்கர் வழியில் சிந்திக்க வேண்டியது! இசைஞானி இளையராஜா வியந்து வியந்து மோடியை பாராட்டுகிறார். ஆனால், அம்பேத்கர் கதாநாயக வழிபாட்டை எதிர்க்கின்றனார். அது நமது ஜனநாயக நிறுவனங்களை அழித்துவிடும். சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும்.

பீமா கோரேகான் வழக்கில் குற்றம் சாற்றப்பட்டு, தலித் அறிஞர்களும், சமூக ஜனநாயக செயல்பாட்டாளர்களும் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டு இருக்கின்றனர். குஜராத் பூனாவில், பசு குண்டர்கள் தலித்துகள் மீது தாக்குதல் நடத்தினர். உத்தரப்பிரதேசம் சகாரன்பூர் உட்பட நாடு முழுவதும் தலித்துகள் மீது தாக்குதல் தொடர்கிறது.

**தலித் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆதிக்கச் சாதியினரால் தொடர்ந்து பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் அவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு எந்த உதவியும் செய்யவில்லை. ஆர்.எஸ்.எஸ். சாதி அமைப்பை ஏற்றுக் கொண்டது. அதனை அறிவியல் பூர்வமானது என்று வாதிடுகிறது.**

அனைத்து சாதி மக்களும் அதில் அங்கம் வகிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால், அம்பேத்கர் சாதி ஒழிப்புதான் தன்னுடைய லட்சியம் என்று அறிவித்தவர். சாதியில் இருந்தும், அந்த அமைப்பில் இருந்தும் வெளியேற வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வைத்தவர். அதற்காக பரப்புரையை நிகழ்த்தியவர்.

ஆதிக்க சாதியினரால் தலித் மக்கள் பாதிக்கப்பட்ட போது அவர்களுக்கு அவர் ஆறுதல் சொல்லவில்லை. மாறாக இந்தப் பிரச்சினையை தீர்க்க பணிவுடன் பேசுவது அல்லது மன நெகிழ்ச்சியாக பேசி உரிமைகளை பெறலாம் என்று நினைப்பது நிச்சயம் நடக்காது. “ஆடுகளைத் தான் பலியிடுகிறார்கள் சிங்கங்களை அல்ல!” என்று தீவிரமாக முழங்கினார் அம்பேத்கர்.

இடையறாத போராட்டங்கள் மூலம்தான் இந்த சமூக சீரழிவுகளை சீர்படுத்த முடியும் என்று தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்த டாக்டர் அம்பேத்கர் எங்கே? அதற்கு நேர் எதிராக நிற்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், சங்கப் பரிவாரங்களும் எங்கே?

சங்கிகளின் கோயபல்ஸ் புளுகுகளை மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள்!

தொடர்புக்கு: 94444 81703

# உலக சமாதான கழகத்தின் தலைவராக தோழர் பல்லப் சென் குப்தா தேர்வு!

உலக சமாதான கழகத்தின் 22 வது மாநாடு வியட்நாம் நாட்டின் தலைநகரமான ஹனோயில் நவம்பர் 21 முதல் 26 வரை நடைபெற்றது. இதற்கு முந்தைய மாநாடு ஆறு ஆண்டுகளுக்கு முன் பிரேசில் நாட்டில் நடைபெற்றது.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், உலக அமைதிக்காகவும் தொடர்ந்து போராடி வரும் 60 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் எண்ணற்ற சகோதர அமைப்புகளை சார்ந்த பிரதிநிதி குழுக்கள் வியட்நாமில் ஒன்று கூடின. இம்மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர்களில் ஒருவரான பல்லப் சென் குப்தா மற்றும் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜாவும்



பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம், உலக அமைதி மற்றும் சமூக நீதிக்கான ஆதரவை வலுப்படுத்துவோம் என்ற முழக்கம் இந்த மாநாட்டின் மையக் கருவாகத் திகழ்ந்தது.

1950 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த அமைப்பின் முதல் தலைவராக வியட்நாம் நாட்டின் புரட்சித் தலைவரான ஹோ சி மின் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இந்த மாநாட்டில், உலக சமாதான கழகத்தின் தலைவராகத் தோழர் பல்லப் சென் குப்தா ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். தோழர் ரொமேஷ் சந்திராவுக்குப் பின், இந்தப் பொறுப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இரண்டாவது இந்தியர் தோழர் பல்லப் சென் குப்தா ஆவார்.

# மின் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்

சென்னையை அடுத்த அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் சிறு, குறு நடுத்தர தொழில்கள் சங்க கூட்டமைப்பு சார்பில் தமிழ்நாடு அரசு உயர்த்தி உள்ள மின் கட்டண உயர்வை கண்டித்து நவ.25 அன்று அம்பத்தூர் தொழிற்பேட்டை அய்மா சங்கம் அருகில் உண்ணாவிரத போராட்டம் சங்கத் தலைவர் நலங்கிள்ளி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கைத்தொழில் குறுந்தொழில் (டாக்ட் ) சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ. எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., ஆத்மநேசன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசும்போது, மின்சார கட்டணம் பல முறைகளில் உயர்த்தப்பட்டுள்ளது. நிரந்தர கட்டணம் பிக்சட் சார்ச் சார்ஜ் நாலு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது, இதனால் நிறுவனங்கள் நடத்தினாலும் நடத்தாவிட்டாலும் குறிப்பிட்ட தொகை மின்கட்டணமாக செலுத்த வேண்டும் என்பது நலிவடைந்த நிறுவனங்களை மூட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கியுள்ளது என்று தெரிவித்தனர்.

# காலியாக உள்ள அகில இந்தியத் தொகுப்பு மருத்துவ இடங்களை தமிழக அரசிடமே ஒப்படைத்திடுக!

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வலியுறுத்தல்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் (வெளிநாட்டு பிரிவு) செயலாளர் எம்.செந்தில்குமார் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

வெளிநாட்டில் மருத்துவம் படித்து முடித்த 800 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள், பயிற்சி மருத்துவராக பணிபுரிவதற்காக காத்திருக்கின்றனர்.

அவர்கள் பயிற்சி மருத்துவத்தை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் (வெளிநாட்டு பிரிவு) சார்பில், பல கட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

தற்பொழுது அதற்கான அரசணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைக்கு சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கமும், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டுப் பிரிவும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

பயிற்சி மருத்துவம் மேற்கொள்ள உள்ள வெளிநாட்டில் படித்த இம்மாணவர்களுக்கு, விடுதி வசதிகளையும் வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் தேர்தலை, முழுமையான வாக்காளர் பட்டியலை வெளியிட்டு, நேர்மையான முறையில் நடத்திடவும், வாக்குச்சீட்டு முறையில் வாக்களிக்கும் முறையை ரத்து செய்துவிட்டு, இணைய வழியில் வாக்களிக்கும் முறையை நடைமுறைப்படுத்தவும், தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள, அகில இந்திய தொகுப்பு இளநிலை மருத்துவ இடங்கள் பல நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்த இடங்களை உடனடியாக தமிழக அரசிடமே ஒன்றிய அரசு ஒப்படைக்க வேண்டும். அதே போல் முதுநிலை, உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளில் நிரம்பாத இடங்களையும் தமிழ்நாடு அரசிடமே ஒப்படைக்க வேண்டும். இதன் மூலம் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் அவ்விடங்களில் சேர முடியும்.

வேலூரில் உள்ள அரசு சாராத தனியார் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற ரேகிங் கொடுமை மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. தமிழகமெங்கு உள்ள மருத்துவக் கல்லூரிகளில் ராகிங் நிகழாமல் தடுத்திட உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்திட வேண்டும்.

பயிற்சி மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பு மாணவர்களிடம், தொடர்சியாக 24 முதல் 36 மணி நேரம் வரை வேலை வாங்குவதை கைவிட்டு, 8 மணி நேரம் மட்டுமே பணி வழங்கிட வேண்டும். இது தொடர்பான சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு தொடர்ந்து மீறப்படுவது வருத்தமளிக்கிறது. வார விடுமுறை, இதர அரசு விடுமுறைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு தொடர்பில்லாத, முதல்வர் காப்பீட்டு திட்ட வேலைகள் உட்பட வேறு வேலைகள் வழங்கப்படுவதை உடனடியாக கைவிட வேண்டும். இவற்றை கண்காணிக்க ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் குழு உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

உக்ரைனில் இருந்து திரும்பிய மருத்துவ மாணவர்கள் இந்தியாவிலேயே, குறைந்த கட்டணத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில், மருத்துவக் கல்வியை பயில தேசிய மருத்துவ ஆணைய விதிமுறைகளில் தேவையான திருத்தங்களை செய்திட வேண்டும். அவர்கள் மருத்துவப் படிப்பை தொடர ஒன்றிய அரசு உடனடியாக உதவிட வேண்டும்.

அரசுப்பள்ளி மாணாக்கர்களுக்கும், அரசுப் பள்ளி அல்லாத பிற பள்ளிகளில் படிக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கும் "நீட்" தேர்வுக்கான பயிற்சியை, காலத்தோடு தொடங்கி, தரமாக வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். நீட் தேர்விலிருந்து விலக்குப் பெற்றாலும் கூட, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவப் படிப்புகளில் சேர நீட் அவசியப்படுகிறது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

கருப்பை வாய் புற்றுநோயை தடுப்பதற்கான பிறிக்ஷி தடுப்பூசியை 10 வயது முதல் 20 வயது வரை உள்ள பெண்களுக்கு வழங்கிட தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

மருத்துவக் கல்வி மூலம் இந்தித் திணிப்பை ஒன்றிய அரசு மேற்கொள்கிறது. பிற்போக்கான அறிவியலுக்கு எதிரான கருத்துக்களையும், போலி மருத்துவ அறிவியல் கருத்துக்களையும் மருத்துவக் கல்வியில் ஒன்றிய அரசு திணிக்கிறது. ஒன்றிய அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் உதவி வருகிறார். இத்தகைய முயற்சிகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

# கோயில் மனையில் குடியிருப்போர் டிச.10ல் அரை நிர்வாண போராட்டம் நடத்த முடிவு

தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்கத்தின் செயற்குழு கூட்டம் நவ. 26 அன்று மேற்கு அண்ணா நகர், திருவல்லீஸ்வரர் நகர் நல கழக சமூகநல கூடத்தில், மாநிலத் தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன் தலைமையில், மாநில பொதுச்செயலாளர் எஸ்.ஏழுமலை முன்னிலையில் நடைபெற்றது. மகளிர் அணி, சக்திநகர் ராஜேஸ்வரி தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட, திருவல்லீஸ்வரர் நகர் நல கழகத் தலைவர் பென்ஜமின் வரவேற்புரையாற்ற கூட்டம் துவங்கியது.

பின்பு குடியிருப்போர் சங்கத்தின் மாநில தலைவர், நியாயவாடகை குழு நியமித்து 11 மாதங்களாகியும், மாநாட்டில் அறநிலையத்துறை அமைச்சர் ஒருமாதத்தில் நம் பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என்று வாக்குறுதி அளித்து 5 மாதங்கள் கடந்து விட்ட நிலையில், அறநிலையத்துறையின் அதிரடி நடவடிக்கைகளை விளக்கினர். பின்பு சென்னை மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு மத்திய சென்னை, தென்சென்னை, வடசென்னை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும், திருவள்ளூர் மாவட்டத்திற்கும் நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டனர்.

தென்சென்னையின் மாவட்டகுழு தலைவராக பென்ஜமின், துணை தலைவர்களாக இளங்கோ, மனோகரன், செயலாளராக லலித்குமார், இணை செயலாளர்களாக பழனி, ஜெ.கே.சேகர், துணை செயலாளர்களாக செல்வம், ஜெபராஜ், ஆலோசகராக பத்ரிநாத் ஆகியோரும், மத்திய சென்னையின் மாவட்டகுழு தலைவராக சரவணன், துணை தலைவராக இ.ஆர்.எஸ்.பிரபாகரன், செயலாளராக ரவிக்குமார், இணை செயலாளராக இரவிச்சந்திரன், பொருளாளராக சீனிவாசன் ஆகியோரும், வடசென்னையின் மாவட்டகுழு தலைவராக காமராஜ், துணை தலைவராக வியாசைமணி, இணைச் செயலாளர்களாக செந்தில், பஞ்சாபகேசன் ஆகியோரும், திருவள்ளூர் மாவட்டகுழு தலைவராக கே.பி.ஆனந்தன், துணை தலைவர்களாக அன்புரோஸ், ஏ.கே.டி.பாஸ்கர், செயலாளராக பிரபாகரன், இணை செயலாளராக ரமேஷ், பொருளாளராக சுப்பிரமணி ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் நியாய வாடகை நிர்ணயக்குழுவின் பரிந்துரையை வெளியிடக்கோரியும், பரிந்துரை வெளியிடும் வரை அதிரடி நடவடிக்கையை நிறுத்திடக் கோரியும், முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி அவர்களும், தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் 2010 ல் அறிவித்து நடைமுறையில் இருந்த அரசாணைகள் 456/298 ஐ தொடரக் கோரியும், குறைபாடுள்ளது என்று அரசால் அறிவிக்கப்பட்ட 34 ஏ சட்டப்பிரிவை ரத்து செய்யக்கோரியும், மேலாடையை நீக்கி, கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் டிச. 10 அன்று காலை 10 மணிக்கு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

# மதுரை தியாகிகள் மாரி-மணவாளன் நினைவு தினம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் மதுரையில் தோழர் மணவாளன், தோழர் மாரி ஆகியோர் காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நினைவு நாள் நிகழ்வு மதுரையில் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கட்சியின் பகுதி செயலாளர் பாலு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடக்கு பகுதி செயலாளர் மா.இருளாண்டி, மார்க்சிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் ம.கணேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.நந்தாசிங், ஏஐடியூசி மதுரை மாவட்ட செயலாளர் கே.சேது, மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர் இரா.விஜயராஜன், மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடக்கு பகுதியின் முன்னாள் செயலாளர் கதிரேசன் உட்பட இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி மற்றும், மார்க்சிஸ்ட் கட்சியின் தோழர்கள் திரளாக கூடி நினைவஞ்சலி செலுத்தினர்.



# பாலதண்டாயுதம் இரத்ததான இயக்கத்திற்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு



சூலூர் கண்ணம்பாளையத்தில் 1999ஆம் ஆண்டு துவங்கப்பட்டது பாலதண்டாயுதம் இரத்ததான இயக்கம்.

இரத்த தான முகாம்கள் மூலமும், அவசர தேவைகளுக்காக மருத்துவமனைகளுக்கு நேரடியாகச் சென்றும் இரத்தம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மற்றும் தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்றுக் குழுமம் சார்பில் தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தை முன்னிட்டு நவ.21 அன்று கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோவை மாவட்டத்தில் இரத்த தான சேவையில் ஈடுபட்டு வரும் 16 அமைப்புகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. பாலதண்டாயுதம் இரத்த தான இயக்க தலைவர் பெ.மௌனசாமி, செயலாளர் வே.வசந்தகுமார் ஆகியோரிடத்தில் மாவட்ட ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

# ஐ.கமால் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி!



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினராகவும், தரைக்கடை சிறுகடை வியாபாரிகள் சங்கத்தின் மாவட்ட தலைவராகவும் இருந்த ஐ.கமால் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நந்தி கோயில் தெரு ஏஐடியுசி கொடிக்கம்பம் அருகே, தரைக்கடை சிறுகடை வியாபாரிகள் சங்க மாவட்ட செயலாளர் ஏ.அன்சர்தீன் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, உரையாற்றினார். மேற்கு பகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராகிம், வியாபாரிகள் ரவி, அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வி.பி.பாண்டியன் நினைவு நாள் மலரஞ்சலி



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.பி.பாண்டியன் நினைவு நாள் நிகழ்வு ரெட்டியபட்டியில் நடைபெற்றது. அவரது படத்திற்கு தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் செல்வம், முனியசாமி ஏஐடியுசி தங்கராஜ், துணை செயலாளர் பெரியண்ணன் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செய்தார்கள்.

# த.வி.ச. செங்கல்பட்டு மாவட்ட பேரவை

மதுராந்தகம் தாலுகா, லட்சுமி திருமண மண்டபத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க செங்கல்பட்டு மாவட்ட பேரவை பி.எஸ்.எல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ் மாசிலாமணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன், மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பி.எஸ்.ராமலிங்கம், கேவி.சேகுவேராதாஸ், எஸ்.வேண்டாமிர்தம், ஏ.பூமிலிங்கம் ஆகியோர் கொண்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு கன்வினராக பி.எஸ். ராமலிங்கம் தேர்வு செய்யப்பட்டார்.

# அவுட்சோர்சிங் பணிநியமனத்தை கைவிடுக! டயாலிசிஸ் டெக்னிசியன்கள் ஆர்ப்பாட்டம்

கடந்த ஆண்டு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 160 டயாலிசிஸ் டெக்னிசியன்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். அவர்களின் ஓராண்டு ஒப்பந்த பணி 23.11.2022 அன்று முடிவடைந்தது. அவர்களுக்குமீண்டும்பணிநீட்டிப்பையும் வழங்காமல், பணிநிரந்தரத்தையும் வழங்காமல், முதல்வர் மருத்துவக் காப்பீடு மூலம் அவுட்சோர்சிங் முறைக்கு தமிழ்நாடு அரசு மாற்றியுள்ளது. இதன் மூலம் அவர்கள் அரசின் நேரடி ஒப்பந்தப் பணியிலிருந்து னிறிவிஷி போன்ற தனியார் முகமைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். அதோடு அவர்களின் மாதத் தொகுப்பூதியமும் ரூ.20,000 த்திலிருந்து, ரூ.7000 மாக குறைக்கப் பட்டுள்ளது. இது அப்பட்டமான தொழிலாளர் விரோதப் போக்காகும். இந்த நடைமுறையை தமிழ்நாடு அரசு உடனடியாக கைவிடவேண்டும்.

தற்பொழுது பணியாற்றி வரும் அனைத்து டயாலிசிஸ் டெக்னிசியன்களும் கொரோனா காலக்கட்டத்திலும் சிறுநீரக செயலிழப்பிற்கு உள்ளான நோயாளிகளுக்கு, சிறப்பான சேவையை செய்துள்ளனர். தங்களின் உயிரையும் துச்சமென கருதி பணிபுரிந்த அவர்களுக்கு, உடனடியாக பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிரந்தர அடிப்படையில் டயாலிசிஸ் டெக்னீசியன்கள், நியமிக்கப்படவே யில்லை என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படாமல் உள்ளது.




அவர்களின் ஊதிய நிலுவைத் தொகையையும் உடனடியாக அரசு வழங்கிட வேண்டும்.

டயாலிசிஸ்டெக்னிசியன்களுக்கான காலிப் பணியிடங்களை உடனடியாக நிரந்தர அடிப்படையில் நிரப்பிட வேண்டும். மூன்று டயாலிசிஸ் படுக்கைகளுக்கு ,ஒரு டயாலிசிஸ் டெக்னிசியன்கள் இருக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசின் வழிகாட்டுதல் அடிப்படையில் ,டயாலிசிஸ் டெக்னிசியன்களுக்கான,புதிய பணி யிடங்களை உருவாக்கிட வேண்டும்.

தேசியசுகாதாரஇயக்கம்மூலம்,மாநில அரசுகளின் உரிமைகளை ஒன்றிய அரசு பறிக்கிறது. பணிநியமனங்களில் மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்கிறது. தேசிய சுகாதார இயக்கத்தை காரணம் காட்டி,மாநில அரசுகளும் மருத்துவப் பணியாளர் விரோதப் போக்கை கடைபிடிப்பதும், பணியாளர்களை குறைந்த தொகுப்பூதியத்தில் அவுட்சோர்சிங் முறையில் நியமிப்பதும் ஏற்புடையதல்ல. இப்போக்கு கண்டனத்திற்குரியது. மாநில அரசு டயாலிசிஸ் டெக்னிசியன்கள் உட்பட,அனைத்து மருத்துவப் பணியாளர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும், உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நவ.29 என்று சென்னை எழும்பூர், ருக்மணி லட்சுமிபதி சாலையில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் நடைபெற்றது. தமிழ்நாடு டயாலிசிஸ் டெக்னிசியன்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.வி. செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தை தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி துவக்கி வைத்தார். பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் அகில இந்திய தலைவர் பி.காளிதாசன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து நிறைவு உரையாற்றினார்.

# சங்கே முழங்கு!



## வேளாண் காப்பீட்டு திட்ட முறைகேடுகளை களைந்திடுக!

### பினாய் விஸ்வம் எம்.பி. பிரதமருக்கு கடிதம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான பினாய் விஸ்வம், பிரதான் மந்திரி பாசல் பீம யோஜனா (PMFBY) திட்டத்தில் நடைபெற்று வரும் முறைகேடுகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் கூறியிருப்பது பின்வருமாறு:

இயற்கை பேரிடர்களின் விளைவாக ஏற்படும் பயிர் சேதங்களில் இருந்து விவசாயிகளைப் பாதுகாத்திட, 2016 ஆம் ஆண்டு பிரதான் மந்திரி பாசல் பீம யோஜனா (PMFBY) எனும் வேளாண் காப்பீட்டு திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், சமீப ஆண்டுகளில், விவசாயிகளுக்கான காப்பீட்டு இழப்பு தொகையை வழங்குவதில் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் மோசமான முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. தனியார் நிறுவனங்களுக்கு பெரும் இலாபத்தை அள்ளித் தரும் திட்டமாக இந்தத் திட்டம் மாறியுள்ளது. இதன் மூலம், இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நியாயமாகக் கிடைத்திருக்க வேண்டிய பாதுகாப்பு அவர்களுக்கு மறுக்கப்பட்டு இருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில், விவசாயிகள் நலன் காக்க, மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள், இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 1.265 இலட்சம் கோடி ரூபாயைப் பங்களிப்பு செய்துள்ளன. ஆனால், தற்போது கிடைத்துள்ள தகவல்களின்படி, 87,320 கோடி ருபாய் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் 90 சதவிகித இழப்பீட்டு கோரிக்கைகளைப் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் நியாயமாகப் பரிசீலித்து இழப்பீட்டுத் தொகையை வழங்கியுள்ள நிலையில், ரிலையன்ஸ் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் பெரும் இலாப நோக்குடன் செயல்பட்டு வருவதால் வெறும் 39,201 கோடி ரூபாய் அளவிற்கு தான் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கியுள்ளன. இது கார்ப்பரேட்டுகளின் மேற்பார்வையில் நடைபெற்று வரும் ஒரு மாபெரும் ஊழல் ஆகும்.

இந்தச் சூழலில், மோசமான இந்த விஷயம் குறித்து நீங்கள் கவனம் செலுத்துவதுடன், விவசா யிகளின் உரிமைகள் எவ்வாறு கார்ப்பரேட்டுகளால் மறுக்கப்படுகிறது என்பதைக் கண்டறிய கணக்கு தணிக்கையாளர் மூலம் தணிக்கை செய்திட உத்தரவிட வேண்டும்.

விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்காமல் ஏமாற்றி வரும் தனியார் நிறுவனங்களைத் தடை செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம். மேலும், பிரதான் மந்திரி பாசல் பீம யோஜனா (PMFBY) திட்டத்தைப் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம்.

இவ்வாறு அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஒன்றிய அரசின் விவசாயிகள் நல நிதியை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிடுக!

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பிரதான்மந்திரி கிஸான் சம்மான் யோஜனா என்ற புதியநிதி திட்டம் ஒன்றை ஒன்றிய அரசு 2019ல் அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்படி சொந்த நிலம் உள்ளவர்களுக்கு, அதுவும் சிறு, குறு விவசாயிகளுக்கு மட்டுமே ஒரு ஆண்டிற்கு ரூ.6000 த்தை மூன்று தவணைகளில் வழங்கி வருகிறது. இந்த தொகை பெறுவதற்கு பல நிபந்தனைகளை ஒன்றிய அரசு விதித்துள்ளது. அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள், பிற நிலையில் உயர் வருமானம் பெறுபவர்கள் தகுதியற்றவர் ஆவர். ஒரே குடும்பத்தில் பல பேர்கள் நிலம் வைத்திருந்தால் அதில் ஒருவருக்கு மட்டுமே இந்த நிதி கிடைக்கும். இப்படி பல நிபந்தனைகளை விதித்து விவசாயிகளிடையே பிரிவினை ஏற்படுத்துவதை தமிழ்நாடு விவசாய சங்கம் அப்பொழுதே எதிர்த்தது. விவசாயிகளுக்கான நலநிதி என்று அறிவித்த அரசு, விவசாயிகளிடையே பாகுபாடு காட்டி மறுக்கக்கூடாது.

தெலுங்கானா, சத்தீஸ்கர் மாநிலங்கள் போல் ஒவ்வொரு ஆண்டும் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் விவசாய உற்பத்தி ஊக்க நிதி என்பதன் பெயரால் ஏக்கருக்கு ரூ. 10,000 வழங்கிட வேண்டும் என அப்போதே வலியுறுத்தினோம். இதனால் வேளாண்மை உற்பத்தி உயரும். விவசாயிகள் அனைவருக்கும் பயன்படும் என நாம் கோரிக்கை வைத்தோம். ஆனால் ஒன்றிய அரசோ, .விவசாயிகளை பற்றி கவலைப்படாது சாதனை பட்டியலுக்கும் பெயருக்குமான திட்டமாக இதை நடைமுறை படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் தொடங்கிய காலத்தில் தமிழ்நாட்டில் 48 லட்சம் விவசாயிகள் பயன்பெற்றனர். தற்போது 37 லட்சம் விவசாயிகளே பயனாளிகளாக உள்ளனர். 6 லட்சம் பேர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். நில உரிமை பிரச்சினையால் 5 லட்சம் பேர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட 37 லட்சம் விவசாயிகளில் 9 லட்சம் பேர் ஆதார் கார்டை பதிவு செய்யாததால் இவர்களுக்கும் தொகை தற்போது கிடைக்கவில்லை. தெளிவான, சரியான, உறுதியான வழிகாட்டல் இல்லாமல் அவசர கோலத்தில் திட்டம் அறிவிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து ஆறு தவணைகள் முடிந்து ஒன்றிய அரசு மோசடி என சொல்லி நிறுத்தி இருக்கிறது. இப்படியான மோசடி இந்தியாவிலேயே பாஜக ஆளும் உ.பி.யில் தான் அதிகம் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. தமிழ்நாட்டில் கூட ஆண்ட கட்சியினர், அதிகாரிகள் சிலர், இணைய வழி சேவை தொழில் செய்வோர் மோசடி செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே தவறுகள் நடக்காமல் இருக்கவும் குத்தகை விவசாயிகள் உள்ளிட்ட சாகுபடி விவசாயிகள் அனைவருக்கும் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் முறையில் வருமான அளவு பார்க்காமல் ஏக்கருக்கு ரூ.10,000 வேளாண் உற்பத்தி ஊக்கத்தொகையாக ரொக்கமாக வழங்கிட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# நாகை, திருவாரூர் மாவட்டங்களை புறக்கணிக்கும் இரயில்வே நிர்வாகம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

மோடியின் ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டு மக்கள் நலனை புறக்கணித்து வருகிறது. இதில் ஒன்றிய அரசின் இரயில்வே அமைச்சகமும், தென்னக இரயில்வே நிர்வாகமும் குறிப்பாக தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது.

நீடாமங்கலம் மேம்பாலம், இரயில் பராமரிப்பு மையங்கள், சில ரயில்களின் எல்லை நீடிப்பு, நிறுத்தப்பட்ட ரயில்களை மீண்டும் இயக்கக் கோருவது உள்ளிட்ட கோரிக்கைகளை ஒவ்வொரு முறையும் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதும், ஒன்றிய அரசு ஏமாற்றுவதும் மோடி அரசின் வழக்கமாகியுள்ளது.

நாடாளுமன்றத்தில் ரயில் போக்குவரத்து குறித்து தனியாக விவாதித்து வந்த தனி நிதிநிலை அறிக்கை சமர்பிக்கும் முறையை அழித்தொழித்து விட்டது.

ரயில்வே நிர்வாகத்தையும் தனியாருக்கு தாரை வார்த்து, மக்கள் நலனை முற்றிலுமாக கை கழுவி நிற்கிறது ஒன்றிய அரசு. வேளாங்கன்னி, நாகூர், காரைக்கால் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்தளங்களுக்கு மக்கள் வந்து செல்வதை தடுக்கும் செயலில் இரயில்வே நிர்வாகம் செயல்படுகிறது.

புகழ்வாய்ந்த ரயில்வே பணிமனை செயல்பட்ட நாகபட்டினம் இன்று செயலிழந்து கிடக்கிறது. இந்தத் துயர நிலைக்கு தீர்வு காண, திருவாரூர், நாகபட்டினம் பகுதி பொதுமக்கள் ஒன்றுபட்டு நவ.28 அன்று ரயில் மறியல் போராட்டத்தை அறிவித்துள்ளனர். தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள மறியல் போராட்டத்தின் மீது தலையிட்டு தீர்வு காண முயற்சிக்காத தென்னக ரயில்வே நிர்வாகத்தையும், ஒன்றிய அரசின் இர யில்வே அமைச்சகத்தையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

அமைதிப் பேச்சுவார்த்தையில் மக்கள் பிரதிநி திகளிடம், அதிகாரிகள் கொடுத்த உறுதிமொழிகள் அலட்சியப்படுத்தியதன் மூலம் பொதுமக்களை இரயில்வே நிர்வாகம் ஆத்திரமூட்டும் செயலில் ஈடுபடுகிறது. இந்த அணுகுமுறை உடனடியாக கைவிடப்பட்டு, பொதுமக்கள் கோரிக்கைகளை தென்னக ரயில்வே நிர்வாகம் நிறைவேற்றித்தர வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஜீவா ஆட்டோ ஓட்டுநர் சங்க மாவட்ட பேரவை

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ராமநத்தத்தில் ஜீவா ஆட்டோ ஓட்டுநர் சங்கம் (ஏஐடியூசி) மாவட்ட பேரவை கூட்டம் எம். சிவப்பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

எ.தங்கராசு, என்.பெரியசாமி, என்.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆட்டோ சங்க மாநில செயலாளர் பி.மாரியப்பன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் பி.துரை, ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் வி.குளோப், ஏஐடியூசி மாவட்ட குழு ஆர். சுப்பிரமணியன், சிபிஐ மங்களூர் ஒன்றிய செயலாளர் எம்.நிதிஉலகநாதன், சிபிஐ நல்லூர் ஒன்றிய செயலாளர் வி.பி.முருகையன், சிபிஐ ஒன்றிய குழு உறுப்பினர் கே.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

பேரவையில் மாவட்ட தலைவராக வி.பி.முருகையன், மாவட்ட செயலாளராக எம். சிவப்பிரகாஷ், மாவட்ட பொருளாளராக எஸ். சரவணன், மாவட்ட துணைத் தலைவர்களாக எ.தங்கராசு, பி.செந்தில், மாவட்ட துணை செயலாளர்களாக என். பெரியசாமி, என்.ஞானசேகரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும்

# நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்



மணப்பாறை நகராட்சி அலுவலகம் முன்பு துப்புரவு மேற்பார்வையாளர் பணியினை சீனியாரிட்டி அடிப்படையில் உள்ளூர் பணியாளர்களுக்கு வழங்கு, பணியாளர்கள் பணிபுரிய உகந்த வகையில் தரமான தளவாட சாமான்கள் வழங்கிடு, பணியாளர்களின் சம்பளத்தில் பிஎஃப் தொகை இருப்பு விபரத்தை காட்டிடு, ஒப்பந்த பணியாளர்களுக்கு சட்டப்படி ஆண்டுதோறும் ஊதிய உயர்வு அளித்திட நடவடிக்கை எடு என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி தலைமை வகித்தார். திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி. சங்க மாவட்டத் தலைவர் த.இந்திரஜித், மாவட்டச் செயலாளர் சுப்பிரமணியன், மாவட்டத் துணைச் செயலாளர் ஜனசக்தி உசேன், மணப்பாறை கிளை கவுரவத் தலைவர் சௌகத் அலி, டிஎன்எஸ்டிசி மண்டல தலைவர் சுந்தர்ராஜ், மணப்பாறை அமைப்புச்சார சங்க பொது செயலாளர் நல்லுசாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

# நேரு மேல் இவர்களுக்கு ஏன் இந்த கோபம்? நூல் வெளியீட்டு விழா

முதுபெரும் தொழிற்சங்கத் தலைவர், முற்போக்கு எழுத்தாளர் பட்டுக்கோட்டை நா.வீரபாண்டியன் எழுதிய "நேரு மேல் இவர்களுக்கு ஏன் இந்த கோபம்?" நூல் வெளியீட்டு விழா சென்னை எழும்பூர் இக்ஸா மையத்தில் நவ.24 அன்று நடைபெற்றது. மூத்த தொழிற்சங்க தலைவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். ஆர்.பாஸ்கர் வரவேற்புரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு நூலை வெளியிட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர்களில் ஒருவரான யூ.பலராமன் எக்ஸ்.எம்.எல்.ஏ. நூலை பெற்றுக் கொண்டார்.

அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், அகில இந்திய பாதுகாப்புத் துறை ஊழியர் சம்மேளனத்தின் விஜய சீலன், ஆர்.பட்டாபிராமன், அகில இந்திய முற்போக்குப் பேரவையின், அகில இந்திய துணைத் தலைவர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, பீட்டர் துரைராஜ் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில், நூலாசிரியர் நா.வீரபாண்டியன் ஏற்புரை வழங்கினார். அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாநிலத் தலைவர் கே.முத்தியாலு நன்றி நவின்றார்.

## எஸ்.எஸ்.தியாகராஜன் நினைவு கருத்தரங்கம்!

பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு வரமா? சாபமா?' என்ற தலைப்பில் தென் சென்னை மாவட்ட ஏஐடியூசி சார்பில், தோழர் எஸ்.எஸ்.டி நினைவு கருத்தரங்கம் எஸ்.சங்கரநாராயணன் தலைமையில் நடைபெற்றது. எம்.குமார், மாநிலத்தலைவர், த.நா. எஸ்.சி/எஸ்.டி. அலுவலர் நலச்சங்கம் மற்றும் கு.தனசேகரன் பொதுச் செயலாளர் ஓ.பி.சி. ஊழியர் சங்கங்களின் பேரமைப்பு ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் வகிதா நிஜாம் சிறப்புரை ஆற்றினார். தமிழக அரசு சமூக நீதி கண்காணிப்புக் குழு உறுப்பினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினருமான மரு.ஏ.ஆர்.சாந்தி, மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா, ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட தலைவர் ஆ.பாஸ்கர், பொதுச் செயலாளர் ஆர். அழகேசன், செயலாளர் சி.சீனிவாசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கட்டட கட்டுமான தொழிலாளர்களின் மகா சம்மேளன தேசிய மாநாடு





அகில இந்திய ஏஐடியுசி கட்டட கட்டுமான தொழிலாளர்களின் மகா சம்மேளனத்தின் 7வது தேசிய மாநாடு ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் நவ.26, 27 ஆகிய தேதிகளில் கோதாவரி ஆற்றம் கரையோரம் உள்ள ஆஹவனா அரங்கத்தில் தலைவர் விஜயன் குனிசேரி தலைமையில் நடைபெற்றது. தேசிய செயலாளர் வகிதா நிஜாம் துவக்கி வைக்க, பொதுச்செயலாளர் கே.இரவி அறிக்கையை முன்வைத்து பேச, பொருளாளர் கோவை என்.செல்வராஜ் வரவு செலவு அறிக்கையை முன்வைத்தார்.

ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொழிலாளர்களுக்கு விரோதமான நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்ப பெற வேண்டும் என்றும், மோடி அரசால் நிர்மூலமாக்கப்பட்ட தொழிலாளர் நல சட்டங்கள் அனைத்தும் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்றும்,

கட்டடம் கட்டுபவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய நல நிதியை உடனடியாக இரண்டு சதவீதமாக உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும் என்றும், நூறாண்டு காலம் தொழிலாளர்கள் போராடி பெற்ற தொழிலாளர் சட்டங்களின் பலன்கள் அனைத்தும் கட்டுமான தொழிலாளர்களுக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று நாடு முழுவதும் ஒரே மாதிரியான பலன்கள் கட்டுமான தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், குறிப்பாக கட்டுமான தொழிலாளர் குழந்தைகளின் கல்வி செலவு முழுவதையும் வாரியம் ஏற்கவும், மகப்பேறு பலன்கள் சட்டத்தை முழுமையாக அமல்படுத்தி கட்டுமான பெண் தொழிலுக்கு அதன்படி பலன்கள் வழங்கவும், இஎஸ்ஐ மருத்துவ வசதியை மருத்துவ கால நிவாரண உதவியை நாடு முழுவதும் உள்ள கட்டுமான தொழிலாளர்களுக்கு வழங்கிட வேண்டும் என்றும், கட்டுமான தொழிலுக்கான பொருட்கள் அத்தியாவசிய விலைகள் பட்டியலின் கீழ் கொண்டுவரப்பட்டு நிலையான நியாயமான நிலையில் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றிய பாஜக அரசு ஆட்சிக்கு வந்த உடன் யோகா ராம்தேவ் என்கிற சாமியார் பதஞ்சலி என்கிற உற்பத்தி பொருட்களை நாடு முழுவதும் உரிமை பெற்று ஒன்றிய அரசின் பூரண ஆசியோடு இயற்கை சாதனங்கள் என்கிற பெயரில் பல்வேறு வகையான கலப்படங்கள் செய்து பதஞ்சலி என்கிற பெயரில் விற்பனை செய்து வருவதை பொதுமக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதை கணக்கில் கொண்டு முற்றிலுமாக தடை செய்ய வேண்டும் என்று சிறப்பு தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

தேசிய தலைவராக கே.இரவி, தேசிய பொதுச்செயலாளராக விஜயன்குனிசேரி, தேசிய பொருளாளராக கோவை என்.செல்வராஜ் ஆகியோரும்,

துணைப்பொதுச் செயலாளராக தெலுங்கானா மார்கோனி ப்ரவீன்குமார், தேசிய துணைத்தலைவர்களாக மகாராஷ்டிராவின் சங்கர் பூஜாரி, தெலுங்கானாவின் ஸ்ரீனிவாசு, ஆந்திராவின் படால ரமணா, மேற்கு வங்கத்தின் பாசுதேவ் குப்தா உள்ளிட்ட ஏழு பேரும்,

தேசிய செயலாளர்களாக கர்நாடகாவின் உமேஷ், கேரளாவின் சி.பி.முரளி, ஆந்திராவின் வெங்கட சுப்பையா, தமிழ்நாட்டின் எம். முனுசாமி, உத்தரப்பிரதேசத்தின் பலேந்திர சிங் ஆகியோரும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

151 பேர் கொண்ட தேசிய பொதுக்குழுவில் தமிழ்நாட்டிலிருந்து கே.இரவி, என்.செல்வராஜ், எம்.முனுசாமி, இரா.முருகன், ஆர்.துரைசாமி, சி.நந்தினி, வி.சுஜாதா, பி.நிர்மலா, ஜெய மலர், கவிதா ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

முன்னதாக 26 ஆம் தேதி மாநாட்டு வரவேற்பு குழு தலைவரும் சிபிஐ ராஜமுந்திரி மாவட்ட செயலாளருமான மது தலைமையில் தொழிலாளர்களின் பேரணியுடன் மாநாடு தொடங்கியது.

தேசிய செயலாளர், ஆந்திர மாநில செயலாளர் ஒபுலேசு, தலைவர் விஜயன் குனிசேரி, பொதுச் செயலாளர் கே இரவி, தேசிய சம்மேளன செயலாளர் வெங்கடசுப்பையா, ஆந்திர மாநில கட்டடத் தொழிலாளர் சம்மேளன பொதுச் செயலாளர் படாலரமணா ஆகியோர் மாநாட்டில் சிறப்புரை நிகழ்த்தினர்.

# மதவாத, சனாதன சக்திகளுக்கு எதிராக சமர் புரிந்தவர் வள்ளலார்

### கருத்தரங்கில் இரா.நல்லகண்ணு உரை



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டம் திருவான்மியூர் கிளை சார்பில் நவ. 27 அன்று வள்ளலார் இராமலிங்க அடிகள் 200 சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் ஜே. அருள்தாசன் வரவேற்புரை ஆற்றினார்.

மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு தலைமையுரையாற்றும் போது, தமிழ்ச் சமூகத்தின் விழிப்புணர்வுக்கு ஆதிக்கர்த்தர் வள்ளலார் ஆவார் என்று மகாகவி பாரதியார் எழுதியுள்ளார். பிரிட்டிஷ் அரசு ஒழிய வேண்டும் என்று முதன் முதலில் குரல் கொடுத்தவரும் அவரே. கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக என்று பாடினார். தக்காணப் பஞ்சம், தாது வருடப் பஞ்சம் என்று பெரும் இடரில் மக்கள் துன்புற்ற நிலையில் பிரிட்டிஷ் அரசு கொண்டு கொள்ளவில்லை. துயருறும் மக்களை காப்பாற்ற கஞ்சி தொட்டி திறந்தவர் வள்ளலார். மதவாத சனாதன சக்திகளுக்கு எதிராக சமர் புரிந்தவர் வள்ளலார் என்று தமது தலைமை உரையில் இரா. நல்லகண்ணு குறிப்பிட்டார்.

"வள்ளலார் கண்ட சமதர்மம்" என்ற தலைப்பில் பேராசிரியர் நல்லூர் சா. சரவணன் பேசும்போது, வள்ளலார் பின்பற்றிய வழி முறைகளும் கொள்கைகளும் மார்க்சியத்திற்குள் அடங்கும் என்று குறிப்பிட்டார்.

சிபிஐ தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, த.க.இ.பெ. சென்னை மாவட்ட செயலாளர் கணபதி இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சீனிவாசன், திருவான்மியூர் பகுதி கட்சி செயலாளர் எம்.டி. குமார், த.க.இ.பெ. மாநிலக் குழு உறுப்பினர்கள் ரவி, தனம் சிதம்பரநாதன், த.க.இ.பெ. மதிப்புறு தலைவர் ம. இளங்கோவன் மற்றும் மணி, கோ.பன்னீர் செல்வம், இரா. சரவணன், வி.கே.கோபாலன், முருகேசன், வழக்கறிஞர் மதனகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெ.அண்ணாதுரை ஒருங்கிணைப்பு செய்தார். வெங்கடேசன் நன்றி கூறினார்.

வள்ளலார் இருநூறு ஆண்டுகளை சிறப்பிக்கும் வகையில் தொடர்ந்து இணைய வழி கூட்டமும் நடத்துவது குறித்த அறிவிப்பும் செய்யப்பட்டது.

# ஏஐடியூசி மாவட்ட மாநாடுகள்

**தருமபுரி:** தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட 13வது மாநாடு தருமபுரியில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு மாவட்டத்தலைவர் எம்.மாதேஸ்வரன்,கட்டுமான சங்க மாவட்டத்தலைவர் குழந்தைவேலு தலைமை வகித்தனர். நிர்வாகிகள் முருகேசன், விஜயா முன்னிலை வகித்தனர். மாவட்ட துணைச்செயலாளர் ஆர்.நடராஜன் வரவேற்றார். போக்குவரத்து மண்டல பொது செயலாளர் வேலை அறிக்கை வைத்து பேசினார்.ஏஐடியூசி மாநிலத்தலைவரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் சங்க கொடி ஏற்றி, மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ந.நஞ்சப்பன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன் சிறப்புரையாற்றினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாநிலக்குழு உறுப்பினர்கள் கா.சி.தமிழ்க்குமரன், எஸ்.சின்னசாமி,கமலாமூர்த்தி, தகஇபெ முன்னாள் மாநில தலைவர் இரவீந்திரபாரதி, கலிமுல்லா, சி.விஸ்வநாதன், சி.முனியன், சின்னக்கண்ணன், இரவி, கே.பாஸ்கரன், ஏ.சி.மணி, மேனகா ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

மாவட்ட பொது செயலாளர் கே.மணி வேலை அறிக்கை வாசித்தார்.மாவட்ட பொருளாளர் முருகன் வரவுசெலவு சமர்பித்தார். மாநில செயலாளர் ஆர்.ஆறுமுகம் மாநாட்டில் நிறைவு செய்து பேசினார்.

மாநாட்டில் மாவட்ட தலைவராக ப.முருகன், மாவட்ட பொதுச் செயலாளராக கே.மணி, மாவட்ட பொருளாளராக ஏ.முருகன் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.




**அரியலூர்:** அரியலூர் மாவட்ட ஏஐடியூசி 8வது மாநாடு அரியலூர் ஜி.ஆர்.மண்டபத்தில் ராஜேந்திரன் நினைவு அரங்கத்தில்நவ.27 அன்று நடைபெற்றது. மண்டபத்தின் முன்பு மாநாட்டுக் கொடியை ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தலைமைக்குழுவாக தனசிங், பாண்டியன், அமிர்தவள்ளி ஆகியோர் செயல்பட்டனர். சிவஞானம் வரவேற்புரையாற்றினார். மாநாட்டினை வாழ்த்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இராமநாதன், அரியலூர் ஒன்றிய சிபிஐ செயலாளர் பாண்டியன், திருமானூர் ஒன்றிய செயலாளர் கனகராஜ் உள்ளிட்டோர் பேசினர். மாநாட்டில் மாவட்ட பொதுச் செயலாளர் தண்டபாணி நடைபெற்ற வேலைகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்து விவாதத்திற்குப்பின் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டில் மாவட்ட தலைவராக சிவஞானம், பொதுச் செயலாளராக தண்டபாணி, துணைத்தலைவர்களாக தனசிங், சிலம்புசெல்வி, பாண்டியன், செயலாளர்களாக தம்பிசிவம், பிச்சைப்பிள்ளை, நல்லுசாமி, பொருளாளராக மாரியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். 200க்கும் மேற்பட்டோர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்ட ஏஐடியுசி 7வது மாவட்ட மாநாடு நவ.26 அன்று என்.தம்பிராஜா நினைவு அரங்கம் திருச்செங்கோடு நாடார் திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

சி.நந்தகுமார், பி.கந்தசாமி, ஆர்.ரவீந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொடியேற்றி ஏஐடியூசி மாநில செயலாளர் எஸ.சின்னச்சாமி மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

என்.முருகராஜ் அரசு போக்குவரத்து கழக மாநில செயலாளர், கே.அன்புமணி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர், ஆர்.தமிழ்மணி அரசு பணியாளர் சங்க மாவட்ட தலைவர், சி.ஜெயராமன் வி.தொ.ச. மாவட்ட செயலாளர், எஸ்.ராமகிருஷ்ணன் மில் தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர், என்.செல்வராஜ் விவசாயிகள் சங்க மாவட்ட பொறுப்பாளர், வி.வெங்கடசுப்பிரமணியம் ஏஐபிஇஏ அகில இந்திய வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில் 42 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. அதில் 13 பேர் கொண்ட மாவட்ட நிர்வாகக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக எஸ்.ஜெயராமன், மாவட்ட பொதுச் செயலாளராக பி.தனசேகரன், மாவட்ட துணை தலைவர்களாக சி.நந்தகுமார், எஸ்.சின்னச்சாமி, வி.வெங்கடசுப்பிரமணியம், குழந்தான், மணிவேல் ஆகியோரும், அமைப்பு நிலை செயலாளராக என்.முருகராஜ் பரப்புரை செயலாளராக சி.ஜெயராமன், வெளியீட்டு செயலாளராக எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்ட செயலாளராக பி.கந்தசாமி, அலுவலக செயலாளராக ஆர்.ரவீந்திரன், மாவட்ட பொருளாளராக கே.எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஈரோடு எல்.ஆர்.பழனிசாமி மறைவு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு மாவட்ட மூத்த முன்னோடி எல்.ஆர்.பழனிசாமி (80) நவ.26 அன்று ஈரோட்டில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் எல்.ஆர்.பழனிசாமி ஈரோடு மாநகர் எல்லையில் உள்ள லக்காபுரத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதில் ஈரோடு நகரில் நகைக் கடை தொழிலாளியாக வேலை செய்தவர். பின்னர் சிறு நகைக்கடை வைத்து படிப்படியாக முன்னேறியவர்.

இளம் வயதில் கம்யூனிஸ்டு இயக்கத்தை சேர்ந்த கே.எஸ். நாச்சிமுத்து, எஸ்.பி வெங்கடாசலம், ஆர்.ரங்கசாமி எம்.நாகப்பன் போன்ற முன்னணி தலைவர்களுடன் ஏற்பட்ட நட்பில் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயல்படத் தொடங்கியவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வட்டாரக் குழுச் செயலாளர், மாவட்டக் குழு உறுப்பினர் போன்ற பொறுப்புகளில் மிகச் சிறப்பாக செயல்பட்டவர். கட்சியின் மாநிலக் குழுக் கூட்டங்கள், தொழிற்சங்க மாநில மாநாடுகளை நடத்த முன்னின்று உதவியவர்.

கலை இலக்கிய அரங்கிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செலுத்தியவர். மாநகரின் முக்கியப் பகுதியான கருங்கல்பாளையம் பகுதியின் மக்களின் நன்மதிப்பை பெற்றவர். தோழர் எல்.ஆர். பழனிசாமியின் மறைவு கட்சிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரது மனைவி லட்சுமி இருக்கிறார். இவர்களுக்கு சக்திவேல், மெய்யப்பன், பூமிநாதன் என்று மூன்று மகன்கள். இவர்களில் மெய்யப்பன் சில வருடங்களுக்கு முன்பு சாலை விபத்தில் உயிரிழந்தார். தோழர் எல்.ஆர்.பழனிசாமியின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி செலுத்துகிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது மனைவி லட்சுமிக்கும், மகன்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## தென்மலையில் கட்டட சங்க புதிய கிளை தொடக்கம்

தென்காசி மாவட்டம், தென்மலையில் ஏஐடியூசி கட்டட சங்கம் புதிய கிளை துவக்க விழா மா.கணேசன் தலைமையில் நடைபெற்றது. பெயர் பலகையை ஆசிரியர் பாப்புராஜா திறந்து வைத்தார். புதிய நிர்வாகிகள்: தலைவராக மா. கணேசன், துணைத்தலைவராக செ. மாரியப்பன், செயலாளராக இரா.கோவிந்தன், துணைச்செயலாளராக எஸ்.சங்கம், பொருளாளராக கா.கருத்தப்பாண்டியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சிபிஐ மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் டி. சுப்பையா, ஜனசக்தி நிருபர் கே.பழனிச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.


## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

### மாநிலக்குழு கூட்டம்

நாள் : 13.12.2022 செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : இக்ஷா மையம் (மியூசியம் எதிரில்) எழும்பூர்
தலைமை : **இரா.நல்லகண்ணு** மாநிலத் தலைவர்
பங்கேற்போர் : **இரா.முத்தரசன்** சிபிஐ மாநிலச் செயலாளர்
புதுவை **இராமமூர்த்தி**
தலித் உரிமைகள் இயக்க தேசியத் தலைவர்

மாநிலக்குழு உறுப்பினர்கள் குறித்த நேரத்தில் பங்கேற்க வேண்டுகிறோம்

தோழமையுள்ள
**மு.வீரபாண்டியன்**
மாநிலச் செயலாளர்


## வசன எழுத்தாளர் ஆரூர்தாஸ் மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் வசனம் எழுதி, சாதனை படைத்த ஆரூர்தாஸ் (91) காலமானர் என்ற செய்தி, ஆழ்ந்த வேதனை அளிக்கிறது.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில், நாகபட்டினம் பகுதியில் சந்தியாகு ஆரோக்கிய மேரி தம்பதிகளுக்கு 1931 ஆண்டு பிறந்த ஆரூர் தாஸ் 1955 ஆம் ஆண்டு பிரபல வசன எழுத்தாளர் தஞ்சை என்.ராமையா மூலம் திரைக்கதை எழுதும் பணியில் நுழைந்தார். வாழவைத்த தெய்வம் திரைப்படத்துக்கு வசனம் எழுதத் தொடங்கிய ஆரூர் தாஸ், ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு வசனம் எழுதி சாதனை படைத்துள்ளார். இவரது வசனங்கள் தமிழ் மக்களின் பேசும் மொழியில் ஒரு சீர்மை உருவாக பங்களிப்பு செய்துள்ளது. பல்துறை ஞானம் பெற்ற ஆரூர் தாஸின் வசன நடை எளிய முறையில் மக்களை சென்றடைந்து, அவர்களது உணர்வுகளில் கலந்து வாழ்ந்து வருகிறது. ஆரூர் தாஸ், மறைவு எளிதில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் படைத்த வசனங்களில் மரணத்தை வென்று என்றென்றும் வாழ்ந்திருப்பார்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், திரையுலக நண்பர்களுக்கும், கலைஞர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## நான்கு வழி சாலை பணிகளை விரைவாக நிறைவு செய்ய வேண்டும்

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் கன்னியாகுமரி மாவட்ட குழு கூட்டம் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் கே. சந்தானம் கலந்துகொண்டார். மாவட்ட பொருளாளர் பி.தாமரைசிங், எஸ்.அனில்குமார், ஜி.சுரேஷ்மேசியதாஸ், வி.அருணாசலம், ஆர்.செல்வராணி, வி.அருள்குமார், எஸ்.நாராயணசாமி ஆர். இசக்கிமுத்து சுதா மதன் மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், டிசம்பர்29அன்று நடைபெறும் ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டத்தை விளக்கி குமரி மாவட்டம் முழுவதும் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடத்துவது எனவும்,

கன்னியாகுமரி களியக்காவிளை நால்வழிசாலை நீண்டகாலமாக முடிவடையாமல் பல்வேறு காரணங்களால் வேலை முடிய வில்லை. தற்போது மறு ஒப்பந்தம் ஏற்கப்பட்ட நிலையில் பணிகளை உடனடியாக தொடங்கிட வலியுறுத்தியும்,

ஆசாரிபள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய் பிரிவையும் இதய அறுவை சிகிச்சைக்கான உள்கட்டமைப்பை உருவாக்கிட சுகாதார துறையை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இந்த வார தம்பிக்குறள்

### 98. கலையின் நிலை

**கலையலாதி யானதென்ப கற்றார் அவர்தம்**
**கலைநிலை கண்டா ரிலர்.**


கல்வியாளர்கள் கலைமிகவும் ஒப்பற்ற சிறப்புடையது என்று கூறுவார்கள். ஆனால் அந்தக் கலை எதற்குப் பயன்பட வேண்டும் என்று அறிய மாட்டார்கள் (கலை கலைக்காகவே என்று எண்ணுவர்)

**கலைதருதல் இல்லையாம் காரியம் ஆங்கே**
**சுவைதருதல் இல்லையாம் துப்பு.**

வாழ்க்கைக்குப் பயன்படாத கலை, சுவையில்லாத உணவு போன்றதாகும். (கலை வாழ்க்கைக்கு பயன்பட வேண்டும்).

# நூல் நயம்

## இவர்கள் நம் தோழர்கள், வர்க்கப் போராட்ட நட்சத்திரங்கள்




வர்க்கப் போராட்டம் தான் சமூக வரலாற்று வளர்ச்சியில் உந்து சக்தியாக இருக்கிறது. அந்த வர்க்க போராட்டத்தில் களமாடிய வீரர்கள் அமீர் ஹைதர்கான் முதல் மதுரை லீலாவதி வரை பத்து தோழர்களின் வரலாற்றை, "இவர்கள் நம் தோழர்கள், வர்க்கப் போராட்ட நட்சத்திரங்கள்" என்கிற தலைப்பில் சு.கருப்பையா, செ. காமராஜ் இணைந்து எழுதி உள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் அமீர் ஹைதர்கானின் பங்கு மிக முக்கியமானது. அது ஈடில்லா வீரமும், இணை இல்லா விவேகமும், அளப்பரிய தியாகமும் நிறைந்ததாகும். இன்றைய பாகிஸ்தானில் உள்ள ராவல்பிண்டிக்கு அருகில் பிறந்து, சென்னை வரை வந்து களமாடிய வீரர் அவர். பம்பாயில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் எஸ்.ஏ. டாங்கே, எஸ்.வி. காட்டே ஆகியோர்களை சந்தித்து, இந்திய பொதுவுடமை கட்சிக்கும், சர்வதேச கம்யூனிஸ்ட் அகிலத்திற்கும் தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்று கூறி அதை உருவாக்கியவர். 'கம்யூனிஸ்டுகள் விதை போன்றவர்கள். மக்கள் மண் போன்றவர்கள். செல்லும் இடமெல்லாம் வேர் விட்டு வளர வேண்டும்" என்ற மாவோவின் வாக்குக்கு இணங்க வாழ்ந்தவர் . "இந்தியாவில் பிரிட்டிஷ் அரசுக்கு நான் ஒரு துளி விஷம் என்றால், என் தலை எப்போதும் பெருமையுடன் நிமிர்ந்திருக்கும். நான் விதைத்த விதை நிச்சயம் கனி கொடுக்கும். உங்களால் அதை அழிக்க முடியாது" என்றார் அமீர் ஹைதர் கான். அப்படிப்பட்ட கம்பீர மனிதனின் கதை இதில் உள்ளது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை நாதமாக, தஞ்சையின் வயல்வெளியில் ஒலித்த ஓங்கார குரலின் சொந்தக்காரர் தான் பி. சீனிவாசராவ். அடித்தால் திருப்பி அடி என உரிமை முழக்கம் எழுப்பியவர். இடுப்பில் கிடந்த துண்டை தோளுக்கு இடம் மாற்றியவர். அந்த மகத்தான மனிதரையும் வாசகருக்கு நூல் ஆசிரியர் அறிமுகம் செய்துள்ளார். தோழர் பி சீனிவாசராவை ஒரு சிறந்த கம்யூனிஸ்ட் ஆக மாற்றிய பெருமை அமீர் ஹைதர் காணையே சேரும். பி.சீனிவாசராவின் தொடர்பால்தான் தியாகி கலப்பால் குப்பு, வாட்டாக்குடி இரணியன், ஜாம்பவான் ஓடை சிவராமன், மணலூர் மணியம்மை போன்ற நெஞ்சுரம் கொண்ட செங்கொடி தோழர்கள் சமூகத்திற்கு கிடைத்தார்கள். விவசாய தொழிலாளர்களின் போராட்டத்தில் இணையற்ற வீரர்களாக திகழ்ந்தார்கள். துப்பாக்கி குண்டுகள் மார்பை பிளந்த போதும், விஷ குப்பிகளை நீட்டிய போதும் கலங்காமல் தொண்டாற்றினார்கள். இவர்களின் இது போன்ற இணையற்ற தியாகம் தான் நம்மை எப்பொழுதும் வழிநடத்தும். மேற்கு வங்கத்தில் புகழ்பெற்ற தெபாகா எழுச்சியின் தளகர்த்தர் அபானி லகரி, தூக்கு மேடை தியாகி பாலு, சங்கர் குகா நியோகி போன்ற வீர தியாகிகளை இளைய தலைமுறை அறிந்து கொள்வதற்காக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது,

நம்மோடு சமகாலத்தில் வாழ்ந்து, சமூக அநீதிக்கு எதிராக போராடி மடிந்த மதுரை லீலாவதி வாழ்க்கை சரிதமும் இதில் அடங்கியுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : சு. கருப்பையா, செ. காமராஜ்
பக்கம் : 96 விலை:100
வெளியீடு : வாசிப்போர் களம், திருச்சி, என்.67,காந்திபுரம், தில்லை நகர், திருச்சி – 620018

## இந்தியாவில் சாதிமுறை அம்பேத்கரும் காந்தியம்




உலகத்தில் எந்த நாடுகளிலும் இல்லாத சாதி என்கின்ற மாபெரும் ஒடுக்குமுறை அமைப்பு இந்திய சமூகத்தில் உள்ளது. இந்த சாதிய ஒடுக்கு முறைகள் குறித்து அம்பேத்கரும், காந்தியும் எந்த நோக்கில் பார்த்தனர் என்பது குறித்த இந்த ஆய்வு நூலை சிவசுப்பிரமணியம் எழுதியுள்ளார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் உருவாகிய சாதி அமைப்பு, மனித குல வரலாற்றில் தனித்தன்மை கொண்டது. புதிய சமூக, பொருளாதார, அரசியலால் சாதி அமைப்பு தளர்ந்து கொண்டிருப்பது ஒரு புறம் இருந்தாலும் , பல்வேறு கொடூரமான வரலாறுகளையும், அரசியல் மாற்றங்களையும்,படையெடுப்புகளையும் மீறி சாதி அமைப்பு இன்றும் தாக்குப்பிடித்து நிற்கிறது. இந்தியச் சமூகத்தில் பெரும்பான்மையினரான இந்துக்களின் வாழ்க்கையில் சாதியின் பங்கு முக்கியமானது. நான்கு வருண அமைப்பு இறுக்கமான ஒன்றாக இல்லாதிருந்து பின்னர், இறுக்கமான சாதியாக மாற்றம் அடைந்ததை அம்பேத்கர் விரிவாக ஆராய்ந்துள்ளார். "வருண தர்ம முறையை சாதியாக உருமாற்றம் செய்தது தான் பிரமாணியத்தின் சுயநலமான வெற்றி" என அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரின் ஏழ்மைக்கு முக்கிய காரணம் சமூக ரீதியில் அவர்களைப் பற்றிய தவறான எண்ணங்கலே ஆகும். பொருள்லீட்டுவதற்கான பல தொழில்கள் அவர்களுக்கு கிடைக்காமல் போகின்றன. இந்த உண்மைதான் சாதாரண ஜாதி இந்துத் தொழிலாளி இடமிருந்து தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரை வேறுபடுத்தி காட்டுகிறது. காந்தியின் முக்கிய ஆயுதமான சத்தியாகிரகத்தையும், உண்ணாவிரதத்தையும் தீண்டத்தகாதவர்களுக்கு ஆதரவாக ஒருபோதும் அவர் பயன்படுத்தியது இல்லை. காந்தி மேற்கொண்ட 21 உண்ணா நோன்புகளில் ஒன்று கூட தீண்டாமையை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படவில்லை என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

முஸ்லிம்களுக்கும், ஏனைய சிறுபான்மையினருக்கும் அளிக்கப்படும் அதே அரசியல் உரிமைகளை தீண்டப்படாதவருக்கும் வழங்குவது என்ற பிரிட்டிஷ் அரசின் முடிவை திரும்பப் பெறுவதற்கு புனே ஒப்பந்தம் வழி வகுத்தது என குறிப்பிடுகிறார். அம்பேத்கரின் வாதங்கள் அவர் காலத்திய சமூக நடப்பியலின் அடிப்படையில் உருவானவை. ஆனால் இதனை எதிர்கொண்டவர்கள், காந்தி என்ற தனி மனிதரை மையமாக வைத்து எதிர்கொண்டனர். இதற்கு அவர்களின் சனாதான தேசியமே அடிப்படையாகும் என ஆ.சிவசுப்பிரமணியம் இன் நூலில் குறிப்பிடுகிறார். இந் நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.


– சமரன்

நூலாசிரியர் : ஆ. சிவசுப்பிரமணியம்
பக்கம் : 24 விலை : ரூ 20
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை – 50

சுழலும் உலகம்

# COP 27 அணு ஆயுதங்களும், பருவநிலை மாற்ற நெருக்கடியும்

**மனிதகுலம் அழிவை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. வாழ்வதற்கு ஏற்ற பூமண்டலத்துக்கான ஒரு போராட்டத்தில், வெற்றி அல்லது தோல்வி என்பது இந்தத் தசாப்தத்தில் முடிவுக்கு வரும் என்று ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் எச்சரித்துள்ளார்.**




எகிப்து நாட்டில் உள்ள ஷர்ம்எல்ஷேக் நகரில் நடைபெற்ற COP 27 எனும் ஐ.நா சபை அமைப்பின் பருவநிலை மாற்ற நெருக்கடி தொடர்பான உச்சி மாநாட்டில் உலக தலைவர்களிடையே உரையாற்றிய ஐ.நா பொதுச் செயலாளர், ''நமது வாழ்க்கைக்கான போராட்டத்தில் நாம் தோல்வியடைந்து கொண்டிருக்கிறோம். மீண்டும் ஈடு செய்யமுடியாத அளவிற்கு, நமது பூமண்டலம் மிக வேகமாக நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அடுத்த இரண்டு வாரம் நடைபெறவுள்ள [ நவம்பர் 6 – 18 ] பேச்சுவார்த்தையின் போது, பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இணைந்து வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் அல்லது பருவநிலை மாற்றம் ஏற்படுத்தும் பேரழிவுகளை ஏற்க வேண்டும்.'' என்று குறிப்பிட்டார்.

உலகம் முழுவதிலுமுள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இம்மாநாட்டில் பங்கேற்றன. 33,449 பங்கேற்பாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள பதிவு செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

பூமியின் தட்ப வெப்ப நிலை அதிகரிப்பு, பனிமலைகள் உருகுவது, கடல்நீர் மட்டம் அதிகரிப்பு ஆகியவற்றின் விளைவாக, தொடர் இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, இப்பிரச்சனை முக்கியத்துவம் பெற்று வருகிறது. பருவநிலை மாற்ற நெருக்கடிக்கு காரணமாக இருந்து வரும் காரணிகளைக் கட்டுப்படுத்தி, குறைக்க வேண்டும் என்று அரசாங்கங்களை வலியுறுத்தி நடைபெற்ற பல்வேறு கூட்டங்களின் தொடர்ச்சியாக இம்மாநாடு நடைபெற்றது. பருவநிலை மாற்ற நெருக்கடியைக் கட்டுப்படுத்திட, முழு அளவிலான ஈடுபாடு இன்றி, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பருவநிலை மாற்ற நெருக்கடியை மேலும் தீவிரமாக்கின.

பருவநிலை மாற்ற நெருக்கடிக்கு மிகப்பெரும் காரணியாக இருக்கும் வாயுக்களின் உற்பத்திக்கு, அதிகரித்து வரும் இராணுவ நடவடிக்கைகளே முக்கிய காரணமாக உள்ளது. ஆயுதங்களின் உற்பத்தி, பராமரிப்பு, போக்குவரத்து, பயன்பாடு ஆகிய இவை அனைத்திலும் ஆற்றலின்/சக்தியின் பயன்பாடு மிக அதிக அளவில் தேவைப்படுகிறது. தற்போது, நடைபெற்று வரும் ரஷ்ய–உக்ரைன் போரில், ஆயுதங்களின் அதிகப்படியான பிரயோகமும் பருவநிலை மாற்ற நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்துகிறது. இந்தப் போர் முடிவுக்கு வரும் என்பதற்கான எந்தவொரு குறியீடும் தென்படவில்லை. போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சுறுத்தல் நிலவுகிறது. அணுமின் நிலையங்கள் தொடர்ந்து அபாயத்தில் உள்ளன. எனவே, உலகின் பல்வேறு பகுதிகளில், பதற்றமான சூழலைக் குறைத்திட, நாடுகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். அதன் மூலம், ஆயுதங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

தற்போது, உலகில் உள்ள ஏறத்தாழ 17,000 அணு ஆயுதங்கள் பருவநிலைக்கும், அதன் மூலமாக, பூமண்டலத்தின் அனைத்து உயிரினங்களுக்கும் ஆபத்தை உருவாக்கக் கூடியவை ஆகும் என்று அமெரிக்காவில் உள்ள ரட்கர்ஸ் பல்கலைக்கழகத்தின் சூழலியல் துறை நடத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

மேலும் ஒரு ஆய்வு தெரிவித்துள்ள தகவலின்படி, ஹிரோஷிமாவில் பயன்படுத்தப்பட்ட அணுகுண்டைப் போல் நூறு அணுகுண்டுகள் பயன்படுத்தப்பட்டால் 200 கோடி மக்களுக்குப் பேராபத்து ஏற்படும். அது போன்றதொரு தாக்குதல் நடந்தால் 2 கோடி மக்கள் கொல்லப்படுவர்; பெருநகரங்கள் அழிந்துவிடும்; கதிரியக்க பிரச்சனைகள் ஒரு கண்டம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்ளும். இதனால் ஏற்படவிருக்கும் உலகளாவிய விளைவுகள் மிகவும் அபாயகரமானவை ஆகும். பூமிக்கு வரும் சூரியனின் கதிர்கள் பெருமளவு தடைபட்டு பூமியின் மேற்பரப்பில் வெப்பநிலை சராசரியாக 1.25 டிகிரி செல்ஸியஸ் குறையும்; இந்த நிலை பல ஆண்டுகள் நீடிக்கும். இதன் காரணமாக, உலக அளவில் மழையின் அளவு 10% குறையும். மழை பொழிவின் அளவு குறையும் பட்சத்தில், வேளாண் பயிர் விளைச்சலும் குறைந்து விடும்; உணவுத் தட்டுப்பாடு உண்டாகும். அதன் நீட்சியாக, உணவுப் பொருள்களின் விலை மிகக் கடுமையாக உயரும். உலகம் முழுவதிலும் உள்ள ஏழை மக்களுக்குப் போதுமான சத்துணவு கிடைக்காத நிலையில் ஊட்டச்சத்து குறைபாடு பெரும் பிரச்சனையாக உருவெடுக்கும். வேளாண் உற்பத்தியில் ஏற்படக்கூடிய ஒரு சிறு அளவிலான திடீர் சரிவு கூட, பெரும் பஞ்சத்தை ஏற்படுத்தி விடும். ஒரு ஆண்டிற்கும் மேல் பஞ்சம் நீடித்தால், உலகின் தென் பகுதியில் பட்டினியால் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை 100 கோடியைத் தாண்டிவிடும் என்று அஞ்சப்படுகிறது.

பெரும் பஞ்சம் நீடிக்கும் காலத்தில் தொற்று நோய்களின் பரவல் அதிகரிக்கும். சமீப காலத்தில், நாம் பாதிப்புக்கு உள்ளாகாத பிளேக் போன்ற நோய்கள் மீண்டும் பெரும் சுகாதார பிரச்சனையாக வெடித்துக் கிளம்பும்.

உணவு தட்டுப்பாடு மற்றும் நெருக்கடி காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மோதல்கள் உருவாகும் சூழலில், அத்தகைய மோதல்கள் அணு ஆயுதப் போராகத் தீவிரமடையக் கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. அணு ஆயுதங்கள் பயன்பாடு ஏற்படுத்தும் கதிரியக்க விளைவுகள் நோய் தொற்றுகளை உண்டாக்கி இறப்பு விகிதத்தைக் கூட்டும். இதனடிப்படையில், எகிப்து நாட்டில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் பங்கேற்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் இயக்கங்கள் நடைபெற்றன. உலக நன்மை கருதி அணு ஆயுதங்களை ஒழித்திட வேண்டும் என்ற கருத்து அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு உள்ளது.

அணு ஆயுத உற்பத்திக்கான செலவினம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அணு ஆயுதங்கள் சட்ட விரோதமானவை என்றும், அவற்றை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்றும் ஐ.நா சபை பிரகடனப்படுத்தியுள்ளது என்ற போதிலும், அணு ஆயுத உற்பத்தி மற்றும் பரவல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அணு ஆயுதங்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவினம் மக்கள் நலவாழ்வு திட்டங்களுக்கு பெரும் தடைகளாக உள்ளன. அமைதியை விரும்பும் அனைத்து குடிமக்களும் இதற்கு எதிராகக் குரலெழுப்ப வேண்டியது முதற்கடமையாகும். போர்கள் காரணமாகத் தீவிரமாகி வரும் பருவநிலை மாற்ற நெருக்கடிக்கு முன்னுரிமை அளித்து இந்தப் பிரச்சனையை COP27 மாநாடு விரிவாக விவாதித்து இருக்க வேண்டும். அது குறித்த நடவடிக்கைகள் வருங்காலத்திலும் தொடர வேண்டும்.

**நன்றி – நியூ ஏஜ், டாக்டர் அருண் மித்ரா**
**தமிழில் – அருண் அசோகன்**

# இடதுசாரி இயக்கத்தின் பெரும்பாணன் கவிஞர் கே.சி.எஸ். நூற்றாண்டு விழா

## அவரது பிறந்த மண்ணில் வண்ணமயம்!

**கவிஞர் கே. சி. எஸ். அருணாசலம் கவிதை, நாடகம், சிறுகதை, மொழிபெயர்ப்பு என கலை இலக்கியத்தின் பல்துறை வித்தகராக தடம் பதித்தவர். "கவிதை என கைவாள்" "பாட்டு வராத குயில்" என்ற இரு கவிதை நூல்களும் "பூர்வீக சொத்து" என்ற சிறுகதை நூலும் அவர் காலத்தில் வெளியாகி புகழ் பெற்றன. 1978 தொடங்கி 1988 வரை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநிலச் செயலாளராக இயங்கினார்.**






அவர் மேடையேறினால் அவர் பாட்டுப் பாடவேண்டும் என்ற கோரிக்கை தவறாமல் எழும். மெல்லத துவங்கி, இனிமையான இசையுடன் அவர் படுவதைக் கேட்டு அரங்கமே மெய் மறந்து கேட்கும். ''சின்ன சின்ன மூக்குத்தியாம்'' என்ற அவரது பாடல்'' பாதை தெரியுது பார்'' என்ற படத்தில் எம்.பி.ஸ்ரீநிவாசன் இசையமைப்பில் டி.. எம்.சௌந்தரராஜன் பாடி அதிர்வுகளை ஏற்படுத்தியது. ''என பெயரும் உன் பெயரும் வியட்நாம்''.'' சிவந்த ரோஜா'', ''இடதுபுறம் படகை விடு ''போன்ற கே. சி. எஸ். பாடல்கள் அமரத்துவம் வாய்ந்தவை.

கே. சி. எஸ். பிறந்த மண்ணில் கடந்த நவம்பர் 26 காலை முதல் மாலை வரை பொள்ளாச்சி என.ஜி. எம். கல்லுரியின் பேரா. ஆட்கொண்டான் அரங்கம், கே.சி. எஸ்.நினைவலைகளால் நிரம்பி வழிந்தது. துவக்க நிகழ்ச்சியாக, சிற்பக்கலைஞர் ஏ. ஜெ. செல்வின் இயக்கிய கே.சி.எஸ். பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது. கவிஞர் சிற்பி, சென்னை இளைஞர் சேர்ந்திசை குழு இயக்குனர் ராமசசந்திரன், மு.பழனியப்பன், ஜீவபாரதி, எஸ்.நடராஜன் மற்றும் கே. சி.எஸ்.அவர்களின் நான்கு மகன்களின் பேட்டிகளுடன் கே.சி.எஸ். பாடல்களுடன் ஆவணப்படம் வரவேற்பைப் பெற்றது. விழாக்குழு செயலாளர் ப.பா. ரமணி வரவேற்புரை வழங்கினார்.

அரங்கம் நிறைந்த விழாவிற்கு கவிஞர் சிற்பி தலைமை ஏற்று கே,சி. எஸ். உடனான அவரது உறவு பற்றியும், அவரது ஆளுமைப் பண்புகள் பற்றியும் நெகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார். கே.சி.எஸ். படத்தை திறந்து வைத்து பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் த.அறம் உரையாற்றினார்.

''அமுதசுரபி'' ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், மார்க்ஸிய அறிஞர் எஸ்.வி.ராஜதுரை, பாரதி ஆய்வாளர் பாரதி கிருஷ்ணகுமார் ஆகியோர் கே.சி.எஸ்.உடனான அனுபவங்களை எடுத்துரைத்தனர். கே.சி.எஸ். தன்வரலாற்று நூல், நூற்றாண்டு மலர், கே.சி.எஸ். ஆவணப் படம், ''கவிதை என கைவாள்'' மறுபதிப்பு நூல் ஆகியவை வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

பிற்பகல் நிகழ்வில் பெருமன்றத்தின் இசைக்கலைஞர்கள் புதுவை மு.ஆதிராமன, குமரி மாவட்ட வி.சிவராமன் இருவரும் கே. சி. எஸ். எழுதிய பாடல்களைப் பாடி மகிழ்வித்தனர். பேரா. த.திலீப்குமாரின் மாற்று களம் குழுவினர் கே.சி.எஸ். எழுதிய ''மிளகாய் பொடி'' சிறுகதையினை குறு நாடகமாக நடித்தனர். அடுத்து கருத்தரங்க நிகழ்வில், முனைவர் இரா.காமராசு கே.சி.எஸ். பெருமன்றத்திற்கும் ''தாமரை'' இதழுக்கும் ஆற்றியுள்ள பணிகளை குறிப்பிட்டு சிறப்புரை வழங்கினார். முனைவர் பா.ஆனந்த குமார் ''பூர்வீக சொத்து'' சிறுகதைகளின் கூறுகளை விளக்கினார்.

அடுத்து கவிஞர் க. அம்சபிரியா தலைமையில் புன்னகைப்பூ ஜெயக்குமார், கவிஜி, சோலை மாயவன், பூபாலன் ஆகிய கவிஞர்கள் கே. சி. எஸ். பாடல் வரிகளை முன்வைத்து கவிதைகள் படைத்தனர். பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளின் முடிவுகளை கம்பன் கலை மன்றத்தின் செயலாளர் சிவகுமார் அறிவித்தார். எழுத்தாளர் திருப்பூர் கிருஷ்ணன் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். கல்லூரி முதல்வர் ரே. முத்துக்குமரன் எழுத்தாளர் கே. சுப்பிரமணியன் கவிஞர் கோவை காமு, கவிஞர் பொள்ளாச்சி அபி, க.மகாலிங்கம் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். கே.சி.எஸ்.மூத்த மகன் சுப்ரமணியம் அவர்களின் மகள் திருமதி பார்வதி தனது தாத்தா பற்றிய நினைவுகளை பகிர்ந்து கொண்டார். இறுதியாக, கவிஞர் கோ. ரகுபதி நன்றி கூறினார். இலக்கிய அன்பர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் உடன் கே. சி. எஸ். குடும்பத்தினர் திரளாக பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. விழாக்குழு பொருளாளர் சீதாராமன் தலைமையில் வங்கி ஊழியர்களும் ஆசிரியர்களும் விழா ஏற்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றி கே.சி.எஸ். நினைவுகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில் பங்களிப்பை செய்தனர்.

**செய்தி: ப.பா.ரமணி**

1 ம் பக்க தொடர்ச்சி




மாவட்டத் செயலாளர் சுமதி மற்றும் இளம்பெண்கள் ஒருங்கிணைப்பாளர் கலை அஸ்வினி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

- தஞ்சை வடக்கு மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் தனசீலி, துணைச் செயலாளர் ஏ.எஸ்தர் லீமா உட்பட் பலர் பங்கேற்றனர்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் செல்வராணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விஜயலட்சுமி கண்டன உரையாற்றினார்.
- திருச்சி மாநகரில் மாவட்டத் தலைவர் எஸ்.பார்வதி தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் அஞ்சுகம், பொருளாளர் ஆயிஷா உட்பட பலர் பங்கேற்றனர்.
- மதுரை மாநகர் மற்றும் மதுரை புறநகர் சார்பாக நாகஜோதி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத் தலைவர் பி.ராஜலட்சுமி, மணிமேகலை ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.
- திருவாருர் மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் தமயந்தி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலத் தலைவர் பி.பத்மாவதி கண்டன உரையாற்றினார். மாவட்டத் தலைவர் சுலோச்சனா, மாலா பாண்டியன், அம்புஜம், ஒன்றியச் செயலாளர்கள் ச.தமிழ்செல்வி, ஆர்.பூபதி, ஆர்.உஷா, வி.கௌரி, பி.சந்திரா உட்பட பலர் பங்கேற்றனர்.
- சிவகங்கை மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் பாண்டிமீனாள் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைச் செயலாளர் மு.கண்ணகி, மாவட்டத் தலைவர் மஞ்சுளா ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தில மாவட்ட அமைப்பாளர் பி.ரீதா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைச் செயலாளர் ஆ.வளர்மதி கண்டன உரையாற்றினார்.
- வடசென்னை மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் செண்பகம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் ஜி.மஞ்சுளா கண்டன உரையாற்றினார்.
- திருச்சி புறநகரில் துணைச் செயலாளர் பிரேமாவதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
- மத்திய சென்னையில் மாவட்ட தலைவர் மாணிக்கவள்ளி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் ஜி.மஞ்சுளா,மாவட்டச் செயலாளர் தனலட்சுமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.
- விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் மாரியம்மன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில துணை செயலாளர் ஆ.வளர்மதி கண்டன உரையாற்றினார்.
- தென்சென்னை மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் சரோஜா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் ஜி.மஞ்சுளா, மாவட்டச் செயலாளர் ஜி.காமாட்சி கண்டன உரையாற்றினார்கள்.
- திருப்பூர் மாநகரில் மாவட்டத் தலைவர் சசிகலா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 03.12.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# பகத்சிங் வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை இயற்றிடுக!

## நாடாளுமன்றம் நோக்கி இளைஞர்கள், மாணவர்கள் பேரணி

**இந்திய இளைஞர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பை உத்திரவாதப்படுத்தும் "பகத்சிங் வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை" இயற்ற வேண்டும், பணம் படைத்தவர்களும், உயர்சாதியினரும் மட்டுமே இனி கல்வி கற்க வேண்டும் என்கிற "தேசிய கல்விக் கொள்கையை" திரும்பப் பெற வேண்டும்" ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் கடந்த 25.11.2022 அன்று புதுடெல்லியில் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடைபெற்றது.**

இளைஞர் பெருமன்ற பொதுச் செயலாளர் இரா.திருமலை, தலைவர் சுக்ஜிந்தர் மகேசரி, மாணவர் பெருமன்ற பொதுச்செயலாளர் விக்கி மகேசரி, தலைவர் சுவம் பானர்ஜி ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

ஜன்பாத் பகுதியில் துவங்கிய பேரணி ஜந்தர்மந்தரில்நிறைவடைந்தது. பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுக்கப்பட்ட நிலையிலும், பேரணி எழுச்சியோடு நடைபெற்றது. ஜந்தர் மந்தரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, தேசிய செயலாளர் பினாய் விஷ்வம் எம்.பி. உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.







இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 3000த்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்கள் இதில் பங்கேற்றனர். தமிழ்நாட்டிலிருந்து இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் தலைமையில் 247 பேர் கலந்துகொண்டனர். இப்போராட்டத்தில் இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர்கள் துரை.அருள்ராஜன், இரா.தமிழ் பெருமாள், வே.வசந்தகுமார், மாநில துணைத் தலைவர்கள் கு.ராஜேந்திரன், மோ.வெங்கடேசன், மாணவர் பெருமன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர், மாநில பொருளாளர் சு.பாலசுப்ரமணியன், மாநில துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ்குமார், மாநில துணைத் தலைவர் பா.தினேஷ், இளைஞர் பெருமன்ற தேசியக் குழு உறுப்பினர்கள் எம்.பார்த்திபன், கலை.அஸ்வினி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தெற்கு ரயில்வேயை கண்டித்து

# நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மறியல்

**திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக ரயில்வே துறையில் எந்தவொரு மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படாததைக் கண்டித்தும், திருவாரூர் – காரைக்குடி அகல ரயில் பாதையில் இரவு நேர கேட்கீப்பர்கள் நியமிக்க வேண்டும்; நீடாமங்கலத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் தொடர் ரயில் மறியல் போராட்டம் சிபிஐ உள்ளிட்ட கட்சிகள் சார்பில் அறிவிக்கப்பட்டு நவம்பர் 28 அன்று நடத்தப்பட்டது.**





### நாகை மாவட்டத்தில்...

கீழ்வேளூர் ரயில் நிலையத்தில் நடைபெற்ற போராட்டத்தில் திமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சியினர் மற்றும் ரயில் உபயோகிப்பாளர்கள் சங்கம், வர்த்தக சங்கம் உள்ளிட்ட அமைப்பினர் பங்கேற்றனர்.

ஆனால், கீழ்வேளூர் ரயில் நிலையத்திற்கு போராட்ட நேரத்தில் வரக்கூடிய எர்ணாகுளம் காரைக்கால் விரைவு ரயில் வரவில்லை. இந்த ரயில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது.

இதனிடையே, கோரிக்கைகளை பரிசீலிப்பதாக தெற்கு ரயில்வே தெரிவித்ததையடுத்து மறியலை ஒத்திவைப்பதாக தெரிவித்து விட்டு கலைந்து சென்றனர்.

இதையொட்டி, நாகை எஸ்.பி. ஜவஹர் தலைமையில், போலீஸார் மற்றும் ரயில்வே பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் தமிழக மீன்வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன், கீழ்வேளூர் எம்.எல்.ஏ. வி.பி.நாகைமாலி, சிபிஐமாவட்டச் செயலர் சிவகுருபாண்டியன், விசிக மாவட்ட பொறுப்பாளர் ரவிச்சந்திரன், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் அமிர்தராஜா, திக மாவட்டத் தலைவர் பூபேஷ் குப்தா, நாகை நகர்மன்றத் தலைவர் இரா. மாரிமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டத்தில்...

திருவாரூர் மாவட்டத்தில் சன்னாநல்லூர், கிளரியம், முத்துப்பேட்டை ரயில் நிலையங்களில் மறியல் போராட்டம் தொடங்கியது. அப்போது, ரயில்வே அதிகாரிகள் போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் சுமுக முடிவு எட்டப்பட்டதையடுத்து போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

சன்னாநல்லூரில் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் நோக்கி வந்த பயணிகள் ரயிலை மறித்தனர். இதில், திமுக ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.ஜோதிராமன், வே.மனோகரன், சிபிஎம் தமிழ் மாநிலக்குழு உறுப்பினர் ஐவி. நாகராஜன், முன்னாள் எம்எல்ஏ கே. உலகநாதன், விசிகமாவட்டச் செயலாளர் மா. வடிவழகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கூத்தாநல்லூர்: கிளரியம் பகுதியில் மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு, திருவாரூர் மாவட்ட திமுக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்எல்ஏ, காங்கிரஸ் மாவட்டத் தலைவர் எஸ்.எம்.பி. துரைவேலன், சிபிஐ மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சிபிஎம் மாவட்டச் செயலாளர் ஜி.சுந்தரமூர்த்தி, மதிமுக மாவட்டச் செயலாளர் பி. பாலச்சந்திரன், விசிக மாவட்டச் செயலாளர் என். இடிமுரசு உள்ளிட்டோர் தண்டவாளத்தில் அமர்ந்து முழக்கங்களை எழுப்பினர்.

மன்னார்குடி – திருச்செந்தூர் விரைவு ரயில் குறைவான பயணிகளுடன் வந்ததால் அதை மறிக்கவில்லை. தொடர்ந்து, தஞ்சை சரக டிஐஜி கயல்விழி பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர், மக்களவை உறுப்பினர் எம். செல்வராசு செய்தியாளர்களிடம் கூறுகையில், 'கோரிக்கைகள் தொடர்பாக குழு அமைத்து தீர்வு காணப்படும் என ரயில்வே அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். அத்துடன் பொதுமக்களின் நலன் கருதி இப்போராட்டம் ஒத்திவைக்கப்படுகிறது' என்றார்.

திருத்துறைப்பூண்டி: முத்துப்பேட்டை ரயில் நிலையத்தில் க. மாரிமுத்து எம்எல்ஏ தலைமையில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. திருவாரூரிலிருந்து காரைக்குடிக்கு சென்றுகொண்டிருந்த பயணிகள் ரயிலை மறித்து முழக்கங்களை எழுப்பினர். இதில் அனைத்து கட்சி பிரமுகர்களும் பங்கேற்றனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.